வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 03.12.2022 சனிக்கிழமை | இதழ் : 360 | பக்கங்கள் : 16

# தேர்தலை பிற்போடும் சூழ்ச்சியில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு!

## அநுரகுமார திஸநாயக்க பகிரங்க சாடல்



கொழும்பு, டிசெம்பர் 03

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஆணைக்குழு சூழ்ச்சிகரமாக செயல்படுவது தெளிவாக விளங்குகிறது. தேர்தலை பிற்போடும் சூழ்ச்சியில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா உள்ளார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு உண்மையை அறிவிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

15

# 44,000 மாணவர்க்கு பல்கலை. அனுமதி

*கொழும்பு, டிசெ. 03*

*இந்த வருடம் 44 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படுவர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.*

*2021ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்ப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று வெளியிடப்பட்டன. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*மேலும், 2021 ஆம் ஆண்டு 2 இலட்சத்து 83,616 பேர் உயர்தர பரீட்சைக்கு தோற்றினர்.*

15

# சிறீ லங்கன் எயார் லைன்ஸ்க்கு குத்தகை அடிப்படையில் விமானம்

*கொழும்பு, டிசெ. 03*

*சிறீ லங்கன் விமான நிறுவனத்துக்கு குத்தகை அடிப்படையில் புதிதாக சில விமானங்களை கொள்வனவு செய்யவுள்ளமை தொடர்பில் தகவல் வெளிவந்துள்ளது.*

*சிறீ லங்கன் விமான நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ள 6 அல்லது 7 விமானங்களின் காலம் நிறைவடைகின்றமையினால், புதிதாக குத்தகை அடிப்படையில் விமானங்களை*

15

# இரவு நேர பொருளாதாரமே நாட்டுக்கு நன்மையை தரும்

## இராஜாங்க அமைச்சர் டயானா

*கொழும்பு, டிசெ. 03*

*இரவு நேர பொருளாதாரத்திலேயே நாட்டுக்கு அதிக இலாபத்தை ஈட்டமுடியும். இதனால் சுற்றுலா பிரதேசங்களில் கடைத் தெருக்கள் - மதுபான விடுதிகள் 24மணி நேரமும் திறக்கப்பட வேண்டும். இரவு நேர களியாட்ட விடுதிகளுக்கும்*

15

# சீனா பொறுப்புடன் நடக்க வேண்டும்!

## ஐ. எம். எவ். தலைவர்

*நியூயோர்க், டிசெ. 03*

*குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மிகப்பெரிய கடன் வழங்குநரான சீனா பொறுப்புடன் நடவடிக்கை எடுக்கும் என எதிர்ப்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.*

*அடுத்த வாரம் சீன அரசாங்கத்தின் பிரதிநிதிகளை சந்திக்கும்போது, இந்த விடயத்தைப்*

15

# இனப் பிரச்னை தீர்வு பேச்சு 12ஆம் திகதி ஆரம்பமாகும்!

*கொழும்பு, டிசெ. 03*

*இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சு எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறும் என்று ஜனாதிபதி தரப்புக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தகவல் அறிய வருகின்றது.*

*இதனிடையே, வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு கிடைத்த ஆதரவு வாக்குகளான 137 வாக்குகளையும் தக்கவைப்பதற்கும் அவர் முயற்சிகளை முன்னெடுத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.*

*இனப் பிரச்னைக்கு பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு வருமாறு தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, அனைத்துக் கட்சி கூட்டத்தையும் கூட்டுவதற்கு திட்டம் உள்ளதாக கடந்த நவம்பர் 23ஆம் திகதி பாராளுமன்றில் உரை*

15

# பொருளாதாரம், விவசாயம் தோல்வியடைந்து விட்டன!

## கல்வி அமைச்சர் சுசில்



*கொழும்பு, டிசெ. 03*

*நாட்டின் பொருளாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய இரண்டும் தோல்வியடைந்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில்*

15

# குளத்திலிருந்து இளைஞரின் சடலம் மீட்பு!

*கிளிநொச்சி, டிசெ. 03*

*கிளிநொச்சி - விநாயகபுரம் கந்தன் குளத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது.*

*முல்லைத்தீவு - மல்லாவி - ஐயங்கன் குளத்தைச் சேர்ந்த பகீரதன் சுமன் என்ற 21 வயதுடைய*

15

# பேச்சு மூலமான தீர்வு என்பது மாயக்காற்றாக மாறும் கனவு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

*சென்னை, டிசெ. 03*

*தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பேச்சு மூலம் தீர்வு காண்பது என்பது மாயக் காற்றாக மாறிக் கொண்டிருக்கும் கனவு என்று கூறியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.*

*அத்துடன், வடக்கு, கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் மாற்றியமைக்கப்படும் மக்கள் தொகை மற்றும் கலாசார மாற்றங்கள் காரணமாக தமிழ் மக்கள் தமது அடையாளங்களை இழக்கின்றனர். தமிழ் அரசியல் கட்சிகளால் பெரியளவில் இதுவிடயத்*

15



# மின் கட்டணத்தை அதிகரிக்க தயாராகின்றது மின்சார சபை!

*கொழும்பு, டிசெ. 03*

*மின்சார கட்டண அதிகரிப்புக்கான கணக்கீடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும் மின் கட்டண அதிகரிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள அமைச்சரவைப் பத்திரம் கிடைத்த பின்னர், பரிந்துரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மின்சார சபையின் உயர் அதிகாரி*

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

மக்களால் நிராகரிக்கப்பட்டவர் ரணில் விக்கிரமசிங்க, அவர் இப்போது ஜனாதிபதியாக இருக்கிறார். அவர் பேச்சுக்கு அழைத்ததும் நிபந்தனை இல்லாமல் பேசப்போகிறார்கள் கூட்டமைப்பினர், அவர்கள் பற்றி தமிழ் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாயன்று பாராளுமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கை ஒன்று தொடர்பாக பதிலளித்தபோது மாவட்ட அபிவிருத்தி சபைகளை அமைக்க தான் தயார் என்று அறிவித்திருந்தது தொடர்பாக நேற்றைய இந்தப் பத்தியிலும் பார்த்திருந்தோம்.

அவர் மாகாண சபைகளை தவிர்த்து மாவட்ட அபிவிருத்தி குழுக்கள் பற்றி பேசவில்லை என்று அவர் தரப்பிலும் விளக்கமளிக்கப்பட்டுவிட்ட பின்னர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தி, “இல்லை இல்லை ரணில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் பற்றி என்னோடு இதற்கு முன்னரும் பேசியிருக்கிறார்.” என்று புதிய தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

இந்தத் தகவலை தான் இதற்கு முன்னரும் தெரிவித்திருந்தார் எனவும் கூறியுள்ள அவர், இதுபற்றி எப்போது எங்கே தெரிவித்திருந்தார் என்பதையும் கூறினால் நல்லது.

அவரின் இந்த தகவல் தமிழ் மக்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்படுவதற்கு முதல் நாளன்று தன்னைச் சந்திக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர்களின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய வஜிர அபேகுணவர்த்தனவின் (அப்போது அவர் எம். பியும் அல்ல என்பது வேறு விடயம்) வீட்டில் தான் ரணிலை சந்தித்தார் என்றும், அப்போது ரணில் தன்னிடம் இனப் பிரச்னைக்கு தீர்வாக இந்த மாவட்ட அபிவிருத்தி சபைகள் தொடர்பாகத்தான் பேசினார் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கிறார்.

ரணில் பிரதமராக பதவியேற்பதற்கு முதல் நாள், அதாவது முதல்நாளில்கூட அவர் பிரதமராவார் என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. சஜித்திடமும் பதவியை பொறுப்பேற்க வருமாறு கோட்டாபய அப்போது கோரிக்கை விடுத்திருந்தார். அத்தகைய முக்கியமான நாளில் ரணிலுக்கு நினைவுக்கு வந்தவர் கஜேந்திரகுமார்தான். அதுவும் தமிழர்களுடைய இனப் பிரச்னையை இனியும் நீடித்துச் செல்ல விடமுடியாது என்று கதைப்பதற்காகத்தான் இவரை அழைத்திருக்கிறார்.

அப்போதே அவர் சமஷ்டியை சாத்தியமற்றது என்று நிராகரித்ததாகவும் கஜேந்திரகுமார் கூறியிருக்கிறார். இதனை அவர் இதற்கு முன்னர் எப்போது வெளியே சொன்னார் என்பது தெரியவில்லை. ஆனால், தான் இதைப்பற்றி முதலும் சொன்னார் என்று தெரிவித்திருக்கிறார்.

கடந்த மே ஒன்பதாம் திகதி நாடு அல்லோலகல்லோலப்பட்டது. ஆளும் கட்சி எம். பிக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அந்த நெருக்கடியில் மகிந்தர் அன்று இராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து, அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாத நிலை. பதினோராம் திகதி மாலை அப்போதைய ஜனாதிபதிக்கும் ரணில் விக்கிமரசிங்கவுக்கும் இடையே நீண்டநேரம் நடைபெற்ற இரகசிய சந்திப்பை அடுத்து மறுநாள் ரணில் பிரதமராக ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார். அதாவது பன்னிரண்டாம் திகதி ரணில் பிரதமராகிறார்.

அதற்கு முதல் நாள் கோட்டாபயவுடனான நீண்ட இரகசிய சந்திப்பையடுத்து ரணில் சந்தித்தது கஜேந்திரகுமாரை. எதற்காக என்றால் இனப்பிரச்னையை இனியும் நீடிக்க அனுமதிக்கமுடியாது என்பதால் என்கிறார் கஜன். இது இரண்டு விடயங்களை சொல்கினறது. முக்கிய பதவியொன்றை ஏற்பதற்கு முதலாக தனது நெருக்கமானவர்களை சந்திக்க வேண்டும் ஆலோசனை பெறவேண்டும் என்றே எவரும் நினைப்பார்கள்.

ரணிலின் நண்பர் சுமந்திரன்தான் என்றும் இருவரும் நாடகமாடுகிறார்கள் எனவும் அந்தப் பேட்டியிலும் சொல்லும் கஜன், ரணிலின் உண்மையான நண்பன் தான்தான் என்பதை சொல்ல வருகிறாரா? அல்லது, இத்தனை நெருக்கடி, பதற்றத்துக்கு மத்தியிலும் இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை சொல்ல வருகின்றாரா? பிரச்னையை தீர்க்கவேண்டும் என்று இத்தனை கரிசனையோடு இருக்கின்ற தலைவர் ஒருவரால் தான் இதனை முடித்து வைக்கவும் முடியும். அவர்கூட புலிகளுடனான பேச்சு காலத்தில் சமஷ்டியை வழங்கவும் தயாராக இருந்தவர்தான்.

அது சரி, அவர் மக்களால் நிராகரிக்கப்பட்டவர் என்றுவேறு கஜேந்திரகுமார் கூறுகிறார். இரண்டாயிரத்து பத்திலும் பதினைந்திலும் தமிழ் மக்களும் தான் உங்களை நிராகரித்துவிட்டார்கள் என்பதற்காக நீங்கள் அரசியலில் இருக்கவில்லையா?

மக்கள் நிராகரிப்பதும் பின்னர் ஏற்றுக்கொள்வதும் அரசியலில் புதிய விடயமல்ல என்பது உங்களுக்குப் புரியாததல்ல.

ஆனானப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கமேகூட ரணிலுடன் நிபந்தனை இன்றியே பேச்சுக்கு சென்றார்கள். அவர்களின் இலட்சியம் தனிநாடுதான் என்றாலும் அதற்காக பேசுவதற்காக அவர்கள் செல்லவில்லை. நமது இலட்சியம் ஒரு நாடு இரு தேசம்தான் என்றாலும் பேசித்தானே பெறமுடியும்.

**- ஊர்க்குருவி**

# ஒதியமலை படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 03

ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வெள்ளிக்கிழமை உணர்வெழுச்சியுடன் நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு - ஒதியமலை கிராமத்துக்குள் கடந்த 1984.12.02 அன்று நுழைந்த இராணுவத்தினர் வீடுகளில் இருந்து 32 இளைஞர்களை பிடித்துச் சென்றனர். இவ்வாறு பிடித்துச் செல்லப்பட்ட 27 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஐவர் இராணுவத்தினரால் முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டனர். இவர்களின் நிலை என்னவென்று இன்றுவரை தெரியாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில், இவர்களின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் ஒதியமலை சனசமூக நிலைய வளாகத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.



படுகொலையானோருக்கு நினைவுதீபம் ஏற்பட்டதைத் தொடர்ந்து உறவினர்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுக் கற்களுக்கு மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலிகளில் ஈடுபட்டனர். அதனையடுத்து அஞ்சலிக்கூட்டமும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், கனகையா தவராசா, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஜோன்சன் ஆகியோருடன் கொல்லப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

(ஐ)

# பேராசிரியர் கைலாசபதியின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 03

பேராசிரியர் கைலாசபதியின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின் 33ஆவது நினைவு நாளில் நடைபெற்றது.

சுழிபுரத்தில் இயங்கும் ‘கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் இந்து நாகரிகத் துறை தலைவர் நாச்சியார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமானவர்கள் பங்கேற்றிருந்தனர்.

“33 வருடங்களின் பின்னர் சொந்த மண்ணில் அப்பாவின் நினைவு நாள் இடம்பெறுகிற இன்றுதான் நான் பங்கேற்கிற நிலை ஏற்பட்டமைக்காக முதலில் மன்னிப்பைக் கோருகிறேன். பல காரணங்களால் வெளிநாட்டு வாழ்வு எங்கள் மீது திணிக்கப்பட்டுவிட்டது. மக்களுக்காக வாழ்ந்த தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் நினைவாக உருவாக்கப்பட்ட இந்த நூலகத்தையும் அரங்கையும் மக்களிடம் கையளிக்கும் இந்த நிகழ்வுக்கு வருகை தந்த உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். அப்பா மீள இயலாத நோயில் இருந்தபோது நான் என்ன செய்ய வேண்டுமென எதிர் பார்க்கிறீர்கள் எனக் கேட்டிருக்கிறேன். எதையும் எதிர்பார்க்கவில்லை என மறுத்து வந்தவர் எனது விடாத நச்சரிப்புக் காரணமாக ‘பேராசிரியர் கைலாசபதி நினைவு நாளைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடாத்துங்கள்’ என்றார். நண்பர்களின் உதவியுடன் 1992 இல் பத்தாவது நினைவுப் பேருரை நிகழ்வை பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ் சங்கத்தில் நடாத்த முடிந்தது. இன்று கைலாசபதியின் நாற்பதாவது நினைவுப் பேருரையை அப்பாவின் நினைவு நாளில் இங்கே முன்னெடுக்கக் கிடைத்த வாய்ப்புக்காக மகிழ்வடைகிறேன்” எனத் தொடக்கவுரை ஆற்றிய சு. சத்தியகீர்த்தி கூறினார்.

“எனது எண்பது வயதைக் கடந்த நிலையிலும் கடந்த இரண்டு நாட்களாக பண்டத்தரிப்பில் இடம்பெற்ற நாடகப்பட்டறையில் நீண்ட நேரம் பங்கெடுத்தேன். அதற்காக மட்டக்களப்பிலிருந்து உடற்சோர்வைப் பாராமல் வந்தேன். இன்று இந்த நிகழ்வை



அறிந்ததும் ஆர்வத்துடன் வந்து கலந்து கொள்கிறேன். பொதுவுடைமைச் சிந்தனை மீதான பற்றார்வமே இந்த உத்வேகத்தை எங்களுக்குத் தருகிறது. தோழர் மணியமும் பேராசிரியர் கைலாசும் உயர்ந்த நட்புறவுக்கு உதாரணமாக இருந்த பொதுவுடைமையாளர்கள். இருவரும் ஒத்த கருத்துடையவர்கள். மக்களை நேசித்தவர்கள். கொம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் மாணவராக இருந்த கைலாஸ் கிரேக்க இலக்கிய விற்பன்னரான தோம்சனின் வழிகாட்டலில் சங்க இலக்கியத்தைக் கிரேக்க இலக்கியத்தோடு ஒப்பாய்வு செய்தார். சங்க இலக்கியத்திலும் மக்களைத்தான் கைலாஸ் தேடினார்” எனப் பேராசிரியர் மௌனகுரு தனது கருத்துரையில் தெரிவித்தார்.

நினைவுப் பேருரையை ஆற்றிய ந. இரவீந்திரன் “தமிழ் மக்களின் முதல் சமயமாக இருந்தது சைவமோ வைணவமோ அல்ல் சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற ‘யாதும் ஊரே யாவரும் கேளீர்..’ என்ற பாடல் பௌத்தமா, சமணமா என்று தமிழறிஞர்கள் மயங்கியதுண்டு - அவையும் தமிழர்களின் முதல் மதமல்ல. இந்தப் பாடல் பௌத்தத்துக்கோ சமணத்துக்கோ உரியதல்ல, ஆசீவக மதத்துக்கு உரியது. தமிழர்களின் தொன்மைச் சமயம் ஆசீவகம்தான் அதன் பல அம்சங்களைப் பௌத்தமும் சமணமும் உள்வாங்கி ஆசீவகத்தை வலுவிழக்கச் செய்த போதிலும் ஐயனார் வழிபாடாகத் தமிழர் மத்தியில் இன்றுவரை ஆசீவகம் தொடர்ந்து வந்தது. இன்று ஐயனார் கோயில்களை முருகன் கோயில்களாக மாற்றுகிற போதிலும் எங்கள் முதல் சமயமான ஆசீவகம் ஏதோ வடிவில் எங்களுடன் தொடர்ந்தும் நீடிப்பதைத் தடுக்க இயலாது” எனக் கூறினார்.

ஈழநாடு
Eelanadu
03.12.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# எது சதி?

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அரசியல் தீர்வை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சதி முயற்சியில் கூட்டமைப்பு ஈடுபடுவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறான குற்றச்சாட்டுகளை அவர் அவ்வப்போது முன்வைப்பது ஆச்சரியமான விடயமல்ல. அரசியலில் ஏதாவது முன்னெடுப்புகள் நடப்பதற்கான அசைவுகள் தெரியத் தொடங்கியதுமே உடனடியாகவே கஜேந்திரகுமார் தனது குற்றம்சாட்டும் பிரசாரங்களை ஆரம்பித்து விடுவதுண்டு. ஆறு தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியதைத் தொடர்ந்து, 13ஆவது திருத்தச் சட்டத்துக்குள் முடக்குவதற்கான சதி ஒன்று இடம்பெறுவதான பிரசாரம் ஒன்றை ஆரம்பித்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் 13ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்ப்பதாகக் கூறி ஊர்திபவனிகளையும் நடத்தியிருந்தார். ஆனால், கஜேந்திரகுமார் கூறியது போன்று எந்தவொரு விடயமும் இடம்பெறவில்லை. இப்போதும் அதேமாதிரியான பிரசாரம் ஒன்றையே ஆரம்பித்திருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப்பிரச்னை தொடர்பில் ஆராயும் நோக்கில் அனைத்து கட்சிகளையும் அழைக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து, தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் சம்பந்தன் இலத்தில் கூடி ஆராய்ந்திருந்தன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கஜேத்திரகுமார் பொன்னம்பலம் சதியொன்று நடப்பதாகக் கூறுகின்றார். உண்மையில் எதுவுமே நடக்கவில்லை.

கஜேந்திரகுமாரின் அரசியல் அணுகுமுறையானது ஆரம்பகால தமிழ் அரசுக் கட்சியின் அணுகுமுறைக்கு ஒப்பானது. கஜேந்திரகுமாரின் பாட்டனார் தவறான பாதையில் பயணிக்கின்றார் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக செயல்படுகின்றார் என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே எஸ். ஜே. வி. செல்வநாயகம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழ் அரசு கட்சியை ஆரம்பித்தார். தமிழ் அரசு கட்சியின் அங்குரார்ப்பண கூட்டம் கொழும்பு மருதானையில் இடம்பெற்றது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை கைவிட்டு சரணாகதி அடைந்துவிட்டதாக செல்வநாயகம் குற்றம்சாட்டுகின்றார். இதனால், காங்கிரஸ் இரண்டாக பிளவுபட்டுவிட்டாகவும் கூறுகின்றார். இன்று அதே அரசியலை, ஜி. ஜி. பொன்னம்பலத்தின் பேரன் முன்னெடுக்க முயற்சிக்கின்றார். தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்டு 73 வருடங்கள் கடந்துவிட்டன. இன்றுள்ள நிலைமையை கருத்தில் கொள்ளாமல் 73 வருடங்களுக்கு முன்னர் செல்வநாயகம் முன்னெடுத்த அரசியலுக்கு பழி தீர்க்கும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழ் அரசு கட்சி அடங்கலாக) சதிசெய்வதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகின்றார்.

1949இற்கு பின்னரான அரசியல் சூழலில் தமிழ் அரசு கட்சி சமஷ்டி கோரிக்கையை முன்வைத்த போதிலும் அதனை அடைவதில் படுதோல்வியடைந்தது. தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் (இதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸூம் உள்ளடக்கம்) பின்னர் மாவட்ட சபைக்கு கீழிறங்கினர். ஏனெனில், சமஷ்டியை அடைவதை மட்டுமே உச்சரித்துக்கொண்டிருந்தால் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களை பாதுகாக்க முடியாமல் போய்விடும். எனவே, ஆகக் குறைந்தளவிலாவது அதிகாரங்களை கைப்பற்றி இருப்பதைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்னும் நோக்கில்தான் அன்றிருந்த தமிழர் கூட்டணி இவ்வாறான நகர்வுகளை மேற்கொண்டிருந்தது. எவருமே தமிழ் இனத்துக்கு அநீதி இழைக்க வேண்டுமென்னும் நோக்கில் எதனையும் திட்டமிட்டு முன்னெடுக்கவில்லை. அன்றிருந்த சூழலில் வேறு தெரிவுகள் இருந்திருக்கவில்லை. மேலும், மிதவாதிகள் எவருமே காந்திய வகையிலான சாத்வீகப் போராட்டத்தை உச்சளவில் முன்னெடுப்பதற்கும் தயாராக இருக்கவில்லை.

இன்றும் அவ்வாறானதோர் இக்கட்டான நிலைமையே இருக்கின்றது. சமஷ்டி தொடர்பில் பேசிக் கொண்டிருப்பதால் மட்டுமே விடயங்களை கையாள முடியாது. அதற்கு மாறாக, தந்திரோபாயமாகவும் விடயங்களைக் கையாள வேண்டும். அவ்வாறான தந்திரேபாய அணுகுமுறைகளை வெறுமனே சதி என்னும் சொல்லால் நிராகரிப்பவர்கள் தங்களிடமுள்ள மாற்றுவழியை முன்வைத்து அந்த மாற்றுவழியின் மீதான தங்களின் அர்ப்பணிப்பை நிரூபிக்க வேண்டும். அவ்வாறில்லாது, முன்னெடுக்கப்படும் ஒவ்வொன்றின்மீதும் சேற்றை வீசுவதால் தமிழ் மக்களின் வாழ்வில் எந்தவொரு மாற்றமும் ஏற்படப் போவதில்லை. வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு இங்கு தொடர்ந்தும் வாழலாமென்னும் நம்பிக்கையை கட்சிகள் வழங்கவேண்டும். அவ்வாறில்லாது, வெறுமனே சமஷ்டி பற்றி உச்சரித்துக் கொண்டிருப்பதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. இந்தப் பின்னணியில் யார் உண்மையிலேயே மக்களுக்கு சதிசெய்கின்றனர்? அரசியல் யதார்த்தங்களை புறந்தள்ளி செயல்படுவர்கள்தான் உண்மையிலேயே மக்களுக்கு எதிரானவர்களாவர்.

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினச் செய்தி

International Day of Persons with Disabilities
3 DECEMBER

வலு இழப்பு என்பது ஒன்றில் பிறப்பிலே ஏற்படுவது மற்றையது விபத்து, யுத்தம் போன்ற அனர்த்த நிலைகளாலே ஏற்படுவது. வலு இழப்பு ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டது என்பதற்காக அவரைப் புறக்கணிப்பதோ அல்லது சமூக ஊடாட்டமையங்களிலிருந்து அவரைத் தவிர்த்து விடுவதோ ஒவ்வாத செயல் முறையாகும்.

வலு இழப்புடன் கூடியவரையும் சமூகத்தில் ஒன்றிணைத்து அவர்களையும் சமூகப் பங்காளாகிகளாக மாற்ற வேண்டும் என்பது பல மனித நேயமுள்ளவர்களின் விருப்பு. அதற்கமைய 1992ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச ரீதியில் மாற்றுத் திறனாளிகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படுவதன் நோக்கம் பொது மக்களுக்கு மாற்றுத் திறனாளிகள் தொடர்பான அறிவூட்டலை வழங்குதலும் மாற்றுத்திறனாளிகளும் பொது வெளியில் இயல்பூக்கத்தோடு செயலாற்ற முடியும் என்பதை வெளிப்படுத்துவதுமே ஆகும்.

இந்த ஆண்டு 2022 டிசெம்பர் 3 ஆம் திகதியான இன்று மாற்றுத் திறனாளிகள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. “அனைத்து தரப்பினரையும் உட்படுத்திய அபிவிருத்திக்கான பண்புரு மாற்றத் தீர்வு: அனைவராலும் அணுகத்தக்க ஓர் சமவாய்ப்புள்ள உலகத்தை உருவாக்கும் புத்தாக்கச் சக்தியின் வகிபாகம்” என்பதே இந்த ஆண்டுக்குரிய தொனிப்பொருள்.

சரிநிகர் சமானமாக அனைவரும் வாய்ப்புக்களைப் பெற்று ஓர் ஆரோக்கியமான உலகை உருவாக்கும் பங்குபற்றுதலை வலியுறுத்தும் வண்ணமாகவே இந்தத் தொனிப்பொருள் அமைகின்றது.

கருவி நிறுவனமும் இந்தத் தொனிப் பொருளோடு பொருந்தியவாறான பணிகளை முன்னெடுத்து வருவதென்பது அனைவராலும் அறியப்பட்டதொன்று. சமூக மாந்தர்களாகிய நாம் அனைவரும் ஒத்திசைவோடு மாற்றுத்திறனாளிகள் மட்டில் பயனுறுதியுள்ள பொருத்தமான செயல்பாடுகளையும் முன்னெடுப்போம் என உறுதிபூணுவோமாக.

**- கருவி நிறுவனம்**



# வவுனியா சேமமடு பகுதியில் கொல்லப்பட்டோரின் நினைவு

*வவுனியா, டிசெ. 03*

வவுனியா சேமமடு கிராமத்தில் 39 வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட 29 பேரை நினைவு கூரும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சேமமடுவில் இடம்பெற்றது.

இதன்போது புலம் பெயர்ந்து வாழும் கிராமத்தவர்கள் நிதிப் பங்களிப்பில் சேமமடு சண்முகானந்தா வித்தியாலயத்தில் சிறுவர் பூங்காவுக்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன் கிராமத்தில் 1000 மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதைவேளை, கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்ந்து ஆதிவிநாயகர் ஆலயத்தில் வழிபாடுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# 15வயது மாணவி துஷ்பிரயோகம் ஆசிரியர் கைது!


*கொழும்பு, டிசெ. 03*

15 வயதான மாணவி ஒருவரின் வீட்டுக்குச் சென்று அவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் ஆசிரியர் ஒருவர் ஹொரணை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, இம்மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹொரணை பதில் நீதிவான் நளினா இம்புலாகொட உத்தரவிட்டார்.

ஹொரணை கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் மூன்று பிள்ளைகளின் தந்தையான 42 வயதுடைய ஆசிரியர் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 03 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - கார்த்திகை 17
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : ஏகாதசி




**மேடம்**
செலவுகள் அதிகரிக்கும்.உறவினருக்காக அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தில் சிறிய பிரச்னை உண்டாகும். பணத்தைக் கையாளுவதில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் எதுவும் இன்று வேண்டாம்.

**இடபம்**
எதிர்பார்த்த வரவு உண்டு. உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினர் வழியே ஆதாயம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். உங்கள் செல்வாக்கு உயரும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த செய்தி வரும். புதிய தொழில் தொடங்குவது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். நீண்ட நாள் பிரச்னை ஒன்றில் தீர்வு காண்பீர்கள். பெற்றோர் வழியே வரவுகள் ஏற்படும். முயற்சி வெற்றியாகும்.

**கடகம்**
குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். குழப்பங்கள் விலகும். திட்டமிட்டு செயல்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள். எண்ணங்கள் நிறைவேறும்.

**சிம்மம்**
செயல்களில் இழுபறி உண்டாகும். பகைவர்களின் கை மேலோங்கும். உங்களது முயற்சிகளில் தடைகள் உண்டாகும். பயணத்தில் எச்சரிக்கை அவசியம். செலவுகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும்.

**கன்னி**
குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் விலகும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.தம்பதி இடையே ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சி காண்பீர்கள்.

**துலாம்**
உடல் நிலையில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகி உற்சாகமுடன் செயல்படுவீர்கள்.தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர்கள். தடைகளை நீக்கி செயல்படுவீர்கள்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் நிலையில் உயர்வு தோன்றும். பூர்வீக சொத்து பற்றிய பேச்சு எழும்.திருமண வயதில் இருப்பவர்களுக்கு உறவினர்கள் வழியே நல்ல செய்தி வரும்.உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**தனுசு**
மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும்.குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். விரும்பியதை அடைவீர்கள்.செயல்களில் தடைகளை சந்திப்பீர்கள். வீண் அலைச்சல் உண்டாகும். செலவுகள் அதிகரிக்கும்.

**மகரம்**
யோகமான நாள்.பொதுநலத்துடன் ஒரு பணியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும்.உங்கள் எண்ணத்தை சகோதரர்கள் உதவியுடன் நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வரவை வைத்து பண நெருக்கடியை சரி செய்வீர்கள்.தைரியமாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**மீனம்**
புதிய சிந்தனை மேலோங்கும். எதிர்காலம் குறித்த எண்ணத்துடன் ஒரு செயலைத் தொடங்குவீர்கள். குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் போவார்கள். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.

# ஓர் ஆட்சி எப்படி செயல்படக்கூடாது: தி. மு. கவின் ஆட்சியே சான்று

## எடப்பாடி பழனிசாமி சாடல்

கோவை, டிசெ. 03

"ஓர் ஆட்சி எப்படி செயல்படக்கூடாது? ஒரு முதல்வர் எப்படி நடந்துகொள்ளக் கூடாது? என்பதற்கு இந்த 18 மாத கால ஆட்சியே சான்று. அ. தி. மு. க.மீது வேண்டுமென்றே திட்டமிட்டு அவதூறு பிரசாரம் செய்வதை முதல்வர் நிறுத்திக் கொள்ள வேண்டும்", என்று தமிழக எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

ஆளும் தி. மு. க. அரசின் சொத்து வரி உயர்வு, மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்வைக் கண்டித்து கோவையில் நேற்று உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தி. மு. க. ஆட்சிப் பொறுப்பேற்று 18 மாதம் காலம் ஆகிறது. இந்த 18 மாத கால ஆட்சியில், கோவை மாவட்டத்தில் இருக்கிற மக்களுக்கு என்ன நன்மை கிடைத்திருக்கிறது. எந்தப் புதிய திட்டங்களையும் கொண்டு வரவில்லை. தி. மு. க. ஆட்சியால், கோவை மட்டு மல்ல தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது. எந்தவொரு பெரிய திட்டத்தையும் கொண்டுவரவில்லை, அதனால் மக்கள் எந்தப் பயனும் பெறவில்லை.

ஓர் ஆட்சி எப்படி செயல்படக்கூடாது? ஒரு முதல்வர் எப்படி நடந்து கொள்ளக் கூடாது? என்ப தற்கு இந்த 18 மாத கால ஆட்சியே சான்று.

தமிழகத்தில் ஒரு குடும்ப ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு பெருநிறுவனம் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிறது. அதை மறந்து முதல்வர் பேசி வருகிறார். (ஐ)

# இலங்கைக்கு கடத்தவிருந்த 220 கிலோ கஞ்சா கைப்பற்றல்!

நாகை, டிசெ. 03

இலங்கைக்கு படகு மூலம் கடத்தப்படவிருந்த 220 கிலோ கஞ்சாவை சுங்கத்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர். அத்துடன், கடத்தலில் ஈடுபட்ட 3 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆந்திரம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்து நாகை கடல் வழியாக இலங்கைக்கு படகு மூலம் கஞ்சா கடத்தப்படுவதாக நாகை சுங்கத்துறையினருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து சுங்கத்துறையினர், நாகை அருகே செருதூர் - வேளாங்கண்ணி இடையே செல்லும் வெள்ளை ஆற்றில் சோதனை நடத்தினர். அப்போது படகு ஒன்றிலிருந்து தப்பி ஓட முயன்றவர்களை பொலிஸார் தடுத்து அதிரடியாக பிடித்தனர்.

படகை சோதனை செய்ததில் 9 மூட்டைகளில் 220 கிலோ கஞ்சா இருப்பது தெரிய வந்தது. பிடிப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணையில் இது இலங்கைக்கு கடத்தவிருந்தது தெரியவந்தது.

மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# தமிழக அரசின் பிடியிலுள்ள கோயில்களை விடுவியுங்கள்

## சுப்பிரமணியன் சுவாமி

உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, அரசு கட்டுப்பாட்டில் இருந்து அனைத்து இந்து கோயில்கள் மற்றும் நிறுவனங்கள் அனைத்தையும் விடுவிக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலினை முன்னாள் எம். பி. சுப்பிரமணியன் சுவாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வருக்கு அவர் அனுப்பிய கடிதத்தில், தமிழகத்தில் உள்ள இந்து கோயில்கள் மற்றும் நிறுவனங்களை பல்லாண்டுகளாக அரசின் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 25 மற்றும் 26ஆவது பிரிவுகளுக்கு எதிரானது.

உச்ச நீதிமன்றத்தில் நான் தொடர்ந்த வழக்கு ஒன்றில், தமிழக அரசு எதிர்மனுதாரராக இருந்தது. அந்த வழக்கின் தீர்ப்பு கடந்த 2014ஆம் ஆண்டு வெளிவந்தது. அதில் 'கோயில்களில் மதம் சார்ந்த விழாக்களை அரசு நடத்தக்கூடாது. கோயில்களில் ஏதேனும் நிதி சார்ந்த முறைகேடுகள், நிதி சார்ந்த சிக்கல் ஏதேனும் இருப்பின், அதற்கு தீர்வுகாண, குறிப்பிட்ட கால அளவுவரை அரசு கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளலாம்' என கூறப்பட்டுள்ளது.

இதன்படி, உச்ச நீதிமன்ற உத்தரவை மதித்து, மாநில அரசு கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இந்து கோயில்களையும், நிறுவனங்களையும் விடுவிக்க வேண்டும். தவறினால், தமிழக அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடருவேன் - என்றுள்ளது. (ஐ)

# தி.மு.க. கூட்டணியில் சேரும் விஜயகாந்த், கமல் கட்சிகள்?

சென்னை, டிசெ. 03

2024 பாராளுமன்றத் தேர்தலில் விஜய காந்தின் தே. மு. தி. க. கட்சியும் கமல் ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சியும் கூட்டணியில் சேரும் என்று தி. மு. க. தரப்பினர் கூறுகின்றனர்.

"வருகிற பாராளுமன்ற தேர்தலில் நாம் வலுவான கூட்டணியை அமைப்போம். அதை தேர்தல் சமயத்தில் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று அண்மையில் முதல்வர் ஸ்டாலின் தனது கட்சியின் நிர்வாகிகளிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வரும் பாராளுமன்ற தேர்தலில் இப்போது கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளுடன் மேலும் 2 கட்சிகள் இணைய வாய்ப்புள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். இதில் தே.மு.தி.க. கட்சியையும், கமல்ஹாசன் கட்சியான மக்கள் நீதி மய்யம் கட்சியையும் தி.முக. கூட்டணியில் சேர்க்க முதலமைச்சர் ஸ்டாலின் வியூகம் வகுத்து வருவதாகக் கூறினர்.

தொடர் தோல்வியால் முடங்கியுள்ள தே. மு. தி. க. கட்சியை விஜயகாந்தின் மனைவியே தற்போது வழிநடத்துகிறார். வெற்றியைப் பெற கடுமையாக முயலும் அந்தக் கட்சி தி. மு. கவுடன் கூட்டணி அமைக்க விரும்புகிறது.

இதே போல் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சியும் தி.மு.க. கூட்டணியில் சேரும் என தி. மு. க. கட்சிக்காரர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசியல் சீர்திருத்தமும் அவசியம்!

## இலங்கையிடம் வலியுறுத்தினார் சமந்தா பவர்



கொழும்பு, டிசெ. 03

**இலங்கையில் பொருளாதாரச் சீர்திருத் தங்களுடன் அரசியல் சீர்திருத்தங்களும் அவ சியம் என சர்வதேச அபிவிருத்திக்கான ஐக் கிய அமெரிக்காவின் நிர்வாகி சமந்தா பவர் வலியுறுத்தியுள்ளார்.**

**சமந்தா பவர் நேற்று முன்தினம் இலங்கை யின் வெளிவிவகார அமைச்சர் அலி சப் ரியை சந்தித்தபோதே இதனை வலியுறுத்திய னார் என ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஜெசிகா ஜென்னிங்ஸ் தெரிவித்தார்.**

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் முன் னுரிமைகள் மற்றும் சீர்திருத்த ங்கள் குறித்து சர்வதேச அபிவி ருத்திக்கான ஐக்கிய அமெ ரிக்காவின் முகவர் நிறுவனத் தின் புரிதலை மேம்படுத்துவ தற்காக இந்த சந்திப்பு இடம் பெற்றதாக அவர் குறிப்பிட் டார்.

இலங்கையின் மீட்சி மற் றும் வளர்ச்சிக்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிறு வனம் எவ்வாறு சாத்தியமான முன்னோக்கிச் செல்லும் பாதையை ஆதரிக்கமுடியும் என இதன்போது இருவரும் கலந்துரையாடினர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

செப்ரெம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்த சமந்தா பவர், இலங்கையின் மிகவும் பாதிக் கப்படக்கூடிய மற்றும் ஒதுக் கப்பட்ட சமூகங்களின் அவ சரத் தேவைகளை நிவர்த்தி செய்தல் உட்பட, இலங்கை யின் சிக்கலான நெருக்கடி யைத் தீர்ப்பதற்கு உதவுவதற் கான அமெரிக்காவின் உறுதிப் பாட்டை மீண்டும் வலியுறுத் தினார் என்றும் ஜெசிகா ஜென்னிங்ஸ் சுட்டிக்காட்டி னார்.

மேலும் சமாதானம் மற் றும் செழிப்பைப் பாதுகாக்க உதவுவதற்காக, இலங்கையுட னான தனது நீண்டகால கூட் டாண்மையை மேலும் வளர்ப் பதற்கு சர்வதேச அபிவிருத்திக் கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிறுவனம் உறுதியாக உள்ளது என்றும் ஜெசிகா ஜென் னிங்ஸ் குறிப்பிட்டார். (அ)

# 15 வயது சிறுமி துஷ்பிரயோகம் தனியார் வகுப்பாசிரியர் கைது

கொழும்பு, டிசெ. 03

15 வயது சிறுமியை பாலி யல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரை பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் பன்னல பிரதேசத்தில் நடந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந் தேகநபரான 24 வயதுடைய ஆசிரியரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

சந்தேக நபர் குளியாப்பிட் டிய நீதவான் ரந்திக லக்மால் முன்னிலையில் நேற்று ஆஜர் படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

சந்தேகத்திற்குரிய ஆசிரியர் தங்கொடுவ, வென்னபுவ, மாகந்துர போன்ற பல பிர தேசங்களில் விஞ்ஞானம் கற் பிக்கும் ஆசிரியர் ஆவார்.

பன்னல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவி ஒரு வரிடம் இருந்து பல கருத் தடை மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டதை தொடர்ந்து சந்தேகநபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

பயிற்சி வகுப்புகளை நடத் துவதற்காக உருவாக்கப்பட்ட வட்ஸ்அப் குழுவில் குறித்த சிறுமியின் தொலைபேசி இலக்கத்தை இந்த ஆசிரியர் கண்டுபிடித்து அதன் மூலம் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ள தாக முதற்கட்ட விசாரணை யில் இருந்து தெரியவந்துள் ளது.

சந்தேகத்திற்குரிய குறித்த ஆசிரியர் சிறுமியுடன் காதல் தொடர்பு வைத்திருந்ததாக நீதிமன்றத்தில் ஒப்புக் கொண் டுள்ளார்.

சந்தேகத்திற்குரிய ஆசிரியர் கைது செய்யப்படும்போது பிறிதொரு வகுப்பில் கற்பித் துக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, சந்தேகத்திற் குரிய ஆசிரியரிடம் படித்த ஏனைய மாணவர்கள் குறித்து விசாரித்து உண்மைகளை தெரிவிக்குமாறு பொலிஸா ருக்கு நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பன்னல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர். (அ)

# ரிக்ரொக் வீடியோ எடுத்த இளைஞன் மோ.சைக்கிளுடன் கடலில் விழுந்தார்!

## பருத்தித்துறை துறைமுகத்தில் விபரீதம்

யாழ்ப்பாணம், டிசெ. 03

பருத்தித்துறை துறைமுகத்தில் நண்பருடன் மோட்டார் சைக்கிளில் ரிக் ரொக் காணொளி எடுக்க முனைந்த இளைஞரொருவர் கடலில் வீழ்ந்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறையை சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கடலில் வீழ்ந்துள் ளார்.

இரண்டு நண்பர்கள் இணைந்து மோட்டார் சைக்கிளில் ரிக்ரொக் எடுக்க முனைந்தபோது மோட்டார் சைக்கிளுடன் ஒருவர் கடலுக்குள ளும் மற்றையவர் வெளியிலும் குதித்துள்ளனர்.

அதனையடுத்து அவ்விடத்தில் கூடிய இளை ஞர்களும், பாதுகாப்புத் தரப்பினரும் கடலில்



வீழ்ந்த இளைஞரை மீட்டெடுத்ததுடன் மோட் டார் சைக்கிளையும் மீட்டு கரை சேர்த்தனர்.

தெய்வாதீனமாக இரண்டு இளைஞர்களுமே உயிர் தப்பியுள்ளனர். (அ)

# மின்சார கட்டண அதிகரிப்புக்கு சஜித் பிரேமதாஸ போர்க்கொடி

கொழும்பு, டிசெ. 03

மின் கட்டணம் அதிகரிப்பு தொடர்பான திட்டத்தை அர சாங்கம் கைவிட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளு மன்றத்தில் நேற்று முன்தினம் வலியுறுத்தினார்.

கடந்த காலங்களில் மின்சா ரக் கட்டணம் அதிகரிக்கப் பட்டபோதிலும், அது மின் சார சபையின் நட்டத்தை ஈடு கட்ட போதுமானதாக இல்லை என்பதால் மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதி கரிப்பது தொடர்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பொருளாதார ஸ்திரத் தன்மை தொடர்பிலான குறு கிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடை யாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழு கூட்டத் தில் இவ்விடயம் தெரியவந் துள்ளது.

இந்நிலையிலேயே மின் சாரக் கட்டண அதிகரிப்பு யோசனையை கைவிடுமாறு எதிர்க்கட்சித் தலைவர் வலியு றுத்தினார்.

இது தொடர்பில் சபையில் கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு,

"மின்சாரக் கட்டணம் அதி கரிக்கப்படவுள்ளது என எமக்கு தகவல் கிடைத்துள்ளது. அமைச்சரவையிலும் இதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் நெருக்கடிக் குள் வாழும் நிலையில் , மின் சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் மக்கள் எவ்வாறு வாழ்வது? இப்படியான மனித நேயமற்ற முடிவுகள் எடுக்கப் படக்கூடாது." - என்றார். (அ)

# உலகிலேயே செலவு குறைந்த நகரங்கள் பட்டியலில் கொழும்பு!

கொழும்பு, டிசெ. 03

உலகிலேயே செலவு குறைந்த நகரங்களில் கொழும்பு இடம்பிடித்துள்ளது.

எக்கனோமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யுனிட் வருடாந்த புள்ளிவிபரத்தின்படி, இந்தியாவின் பெங்களூரா் மற்றும் அல்ஜீரியாவின் தலை நகரான அல்ஜியர்ஸ்/டன் கொழும்பு 161ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

எக்கனோமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யுனிட் டின் உலக வாழ்க்கைச் செலவுக் குறியீட்டின்படி, இந்தியாவின் சென்னை மற்றும் அகமதாபாத் நகரங்கள் கொழும்புக்குக் கீழே உள்ளன, அதே சமயம் தெஹ்ரான், ஈரான், திரிபோலி, லிபியா மற்றும் சிரியாவின் டமஸ்கஸ் ஆகியவை உல கின் மலிவான நகரங்களாக உள்ளன.

இதற்கிடையில், உலகின் மிக செலவான நகரங்கள் பட்டியலில், அமெரிக்காவின் நியூ யோர்க் மற்றும் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளன.

கடந்த ஆண்டு முதல் இடத்தில் இருந்த டெல் அவிவ் இப்போது மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த ஆண்டு கணக்கெடுப்பு ஒகஸ்ட் 16 மற்றும் செப்ரெம்பர் 16, 2022 க்கு இடையில் நடத்தப்பட்டது.

கணக்கெடுப்பு 173 நகரங்களில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அமெரிக்க டொலர்க ளில் செலவை ஒப்பிடுகிறது. இந்த ஆண்டு மதிப் பாய்வில் உக்ரைன் தலைநகர் கீவ் சேர்க்கப்பட வில்லை.

ஒட்டுமொத்தமாக, உலகின் பெரிய நகரங்க ளில் சராசரி வாழ்க்கைச் செலவு இந்த ஆண்டு 8.1 வீதம் அதிகரித்துள்ளது என்று புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

உக்ரைனில் நடந்த போர் மற்றும் விநியோகச் சங்கிலிகளில் கோவிட் தாக்கம் ஆகியவை அதி கரிப்புக்குப் பின்னால் உள்ள காரணிகளாக அடையாளம் காணப்பட்டன. (அ)

# 8 மாதங்களில் 477 மருத்துவர்கள் நாட்டில் இருந்து வெளியேற்றம்!

கொழும்பு, டிசெ. 03

வருடத்தின் முதல் 8 மாதங் களில் 477 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளிநாடு சென்றுள்ளதாக அரச வைத் திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

உத்தேச நியாயமற்ற வரித் திருத்தத்திற்கு எதிராக தொழிற்சங்கங்கள் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர், தொழில்சார்ந்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் வேகமான போக்கினால் எதிர்காலத்தில் பல நெருக்கடி கள் ஏற்படக்கூடும் என குறிப் பிட்டார். (அ)

# தகுதியற்ற பலருக்கு சமுர்த்தி கொடுப்பனவு!

## சபையில் கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 03

தகுதியற்ற பலர் சமுர்த்தி கொடுப்பனவு பெறுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனை கூறினார்.

சமுர்த்தி கொடுப்பனவுக்கு தகுதியுடைய பலருக்கு கொடுப்பனவை வழங்க முடியாத நிலை உள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தகுதியற்ற சிலர் சமுர்த்தி கொடுப்பனவை பெறுவதில் இருந்து நீக்கப்பட்டால், தகுதியுடையவர்களுக்கு அதனை வழங்கலாம் என கூறினார்.



கல்வி , மகளிர் , சிறுவர் விவகார அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, கல்வி மறுசீரமைப்பு தொடர்பிலும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டார்.

இதன்போது, 2023 ஆம் ஆண்டிலிருந்து 25 வருடங்களுக்கு முன்னோக்கி செல்லக் கூடிய பாடசாலை முறைமை தேவைப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

# சாணக்கியன்- ஹர்ச டி சில்வா சபையில் கடுமையான வாதம்!

கொழும்பு, டிசெ.03

**பாராளுமன்றில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் உரையைத் தொடர்ந்து கடுமையான வாதவிவாதங்கள் பதிவாகின.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், சீனா வீட்டுக்கு போ என்ற கோசத்திற்கு தலைமை ஏற்கப் போகிறேன் எனப் பகிரங்கமாகக் கூறினார்.

அத்துடன் இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீனா உதவவில்லை. அதற்கு பதிலாக சீனா, தொடர்ந்தும் இலங்கையைக் கடன் பொறிக்குள் வைத்திருக்கவே முயற்சிக்கிறது. நான் அண்மையில் இது தொடர்பில் பாராளுமன்றில் தெரிவித்த கருத்துக்கு, கொழும்பில் உள்ள சீனத் தூதரகப் பேச்சாளர்,ருவிட்டரில் பதில் வழங்கியுள்ளார். இது, இலங்கை மக்களின் இறைமைக்கு எதிரான செயலாகும். எனவே சீனாவின் இந்த செயற்பாடு நிறுத்தப்படவேண்டும்.

இதனை விடுத்து 22 மில்லியன் இலங்கை மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமானால், இலங்கைக்கு வழங்கியுள்ள கடனை ரத்துச் செய்ய வேண்டும்.

அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்காக மறுசீரமைப்புக்கு உதவ வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, சாணக்கியனுக்கு தமது கருத்தை வெளியிட உரிமையுள்ளது. இருப்பினும் சர்வதேச நாடுகளுடன் இணைந்து செல்லவேண்டும் என சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, சீனா வீட்டுக்கு போ என்ற கோசம் தொடர்பிலும் ஹர்ஷ தமது கருத்தை வெளியிட்டதையடுத்து அவரின் கருத்தை ஆட்சேபித்து சாணக்கியன் குரல் எழுப்பிய போதும், சாணக்கியனுக்கு சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் அனுமதி வழங்க வில்லை.

இதனை தொடர்ந்து தமது கட்சியின் உறுப்பினரின் கருத்துக்கு எதிர்க்கட்சியின் உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா, விமர்சனம் வெளியிடமுடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விவாதித்த நிலையில் இரு தரப்பிற்கும் இடையில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றன. (அ)

# மழையின்றி வவுனியாவில் உளுந்து செய்கை பாதிப்பு

வவுனியா, டிசெ. 03

வவுனியாவில் கடந்த 20 நாட்களாக மழை இன்மையால் உளுந்து செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 5500 கெக்டெயருக்கும் அதிகமாக உளுந்துச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மழையின்மை விவசாயிகளை பெரிதும் பாதித்துள்ளது.

கடந்த காலங்களில் 4000 ரூபாவுக்கு உழவுப் பணம் கொடுத்து 400 முதல் 500 ரூபாவுக்கு விதை உளுந்து பெறக்கூடிய நிலை காணப்பட்டபோதிலும் தற்போது 15,000 ரூபா உழவுப்பணமாகவும் 1,100 முதல் 1,200 வரை விதை உளுந்து கொள்வனவு செய்தே செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# எதிரணி உறுப்பினர்கள் சிலரின் நடத்தை மிகவும் அநாகரிகமானது

## சபையில் கூறினார் சபாநாயகர்

கொழும்பு, டிசெ. 03

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரின் நடத்தை மிகவும் அநாகரீகமானது எனவும் அவர்கள் வீண் பேச்சுக்களால் சபையின் பெறுமதியான நேரம் வீணடிக்கப்படுவதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய அவர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் நடந்து கொள்ளும் விதம் மிகவும் அவமரியாதையாக உள்ளது என தெரிவித்தார்.

இதன்போது எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் மேலும் தெரிவித்த அவர், “சிலர் எழுந்து நின்று பேச வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும்.

நீங்கள் அதை நிறுத்த முயற்சிக்கவில்லை. மிகவும் வருத்தமாக உள்ளது. அணியை நிர்வகிப்பது எனது பொறுப்பு அல்ல, அது உங்களுடையது” என தெரிவித்தார். (அ)

# வங்கிக் கணக்குகளை ஹக் செய்த 8 பேர் கைது

கொழும்பு, டிசெ. 03

வர்த்தகர் ஒருவரின் வங்கிக் கணக்கை ஹக் செய்த குற்றச்சாட்டில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சிஐடி) கணினி குற்றப்பிரிவு இரண்டு உக்ரேனியர்கள் மற்றும் மூன்று பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட எட்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளது.

நவம்பர் 24 ஆம் திகதி சந்தேக நபர்கள் வணிகரின் வங்கிக் கணக்கிற்கு அனுமதியற்ற அணுகலைப் பெற்று அதிலிருந்து 13.7 மில்லியன் ரூபாயை மற்றுமொரு கணக்குக்கு மாற்றியுள்ளனர்.

சந்தேக நபர்கள் நவம்பர் 30ஆம் திகதி கொழும்பு நீதவான் திலின கமகே முன்னிலையில் ஆஜர்படுத் தப்பட்டதையடுத்து, டிசெம்பர் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் கணினி குற்றங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவித்த பொலிஸார், பொது மக்கள் அவதானமாக இருக்குமாறும், வங்கிக் கணக்குகளை அடிக்கடி சரி பார்த்து பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.(அ)

# 1.5 மில்லியன் சுற்றுலா பயணிகள் 2023 இல் இலங்கைக்கு வருவார்கள்

கொழும்பு, டிசெ. 03

2023 ஆம் ஆண்டில் சுமார் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என, சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எனினும், 2024 ஆம் ஆண்டு சுற்றுலா பயணிகளின் வருகை குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய பெர்னாண்டோ, இலங்கையின் சுற்றுலா வரும் மாதங்களில் வளர்ச்சியடையும் என்றும், பல விமான நிறுவனங்கள் இலங்கைக்கு விமான சேவைகளை முன்னெடுக்க திட்டப்பட்டுள்ளதாக கூறினார்.

எவ்வாறாயினும், 2024 இல் சுமார் மூன்று மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதே உண்மையான இலக்கு என்று பெர்னாண்டோ தெளிவுப்படுத்தினார். (அ)

# வேகமாகச் செல்லும் பஸ்களை தெரியப்படுத்த அவசர இலக்கம்

கொழும்பு, டிசெ. 03

வேகமாக செல்லும் பஸ்கள் மற்றும் பஸ் சாரதிகளின் கவனக்குறைவான செயற்பாடு கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்க அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, பொதுமக்கள் தற்போது 1955 என்ற அவசர தொலைபேசி எண்ணுக்கு புகார் செய்யலாம்.

சட்டத்தை மீறும் பஸ் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணையத்தின் செய் தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பயணிகளின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் அதிவேகமாக இயக்கப்படும் பஸ்கள் தொடர்பில் மக்கள் புகார் அளிக்க 24 மணி நேரமும் ஹொட் லைன் வசதி உள்ளது.

புகார் செய்ய விரும்புவோர் இப்போது தங்கள் குறைகளை அனுப்பலாம் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணையத்துக்கு பயணிகள் போக்குவரத்தை எவ்வாறு மேம்படுத்த வேண்டும் என பரிந்துரைக்கலாம். “பயணிகளின் பாதுகாப்பை கருத்திற்க் கொண்டு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். எனவே, மக்களின் பாதுகாப்பிற்கு சவால் விடும் எதற்கும் எதிராக எந்த நடவடிக் கையும் எடுக்க நாங்கள் தயங்கமாட்டோம்” என அவர் மேலும் கூறினார். (அ)

# தரமிறக்கப்பட்ட இலங்கை!

கொழும்பு, டிசெ. 03

பிட்ச், தரமதிப்பீட்டு நிறுவனம், இலங்கையின் நீண்ட கால உள்ளூர் நாணயக் கடன் மதிப்பீட்டை சீசீசீ இலிருந்து ‘சீசீ’க்கு இரண்டு புள்ளிகளால் தரமிறக்கியுள்ளது.

அதிக வட்டி வீதங்கள் மற்றும் இறுக்கமான உள்நாட்டு நிதி நிலைமைகள் காரணமாக, உள்ளூார் நாணயங்களிலான கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளைக் காரணம் காட்டியே, இந்த தரமிறக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.




அத்துடன், நாட்டின் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை பிரதிபலிக்கும் வகையில்,இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கடன் மதிப்பீட்டையும் பிட்ச், நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

# 3 கட்சிகளை சேர்ந்த 70 பேர் மிகவிரைவில் ஐ.தே.கவுக்கு!

கொழும்பு, டிசெ. 03

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட 3 கட்சி களைச் சேர்ந்த 70 பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய வுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட 3 அரசியல் கட்சி களைச் சேர்ந்த 60-70 பாராளு மன்ற உறுப்பினர்கள் எதிர் வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

அவர்களில் பெரும்பாலா னோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானதுடன், புதிய அமைப்பாளர்கள் நிய மனத்திற்கான நேர்முகத் தேர்வு களும் நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதி செய்யப்படும் வெங்காய விலை வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 03

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் இறக்கு மதி செய்யப்படும் வெங்காயத் தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட் டுள்ளதாக மொத்த வியாபாரி கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் வியா ழக்கிழமை இறக்குமதி செய் யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 200 முதல் 300 ரூபாயாக இருந்த நிலையில், நேற்று 150 முதல் 170 ரூபாய் வரை குறைந்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் ஒரு கிலோ உள்ளூர் சிவப்பு வெங் காயத்தின் மொத்த விலை நேற்று முன்தினத்தைவிட நேற்று 340 ரூபாயிலிருந்து 500 ரூபா யாக அதிகரித்துள்ளது. (அ)

# வடக்கு-கிழக்குக் கல்வி அதிகாரிகள் அரசியல்வாதிகள் சிலரின் காலடியில்!

## ஜனா எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 03

வடக்கு-கிழக்கில் உள்ள கல்வித் திணைக்களங்களின் செயற்பாடுகள் அரசாங்க சார்பு அரசியல்வாதிகளை திருப்திப்படுத்துவதற்காக மட்டும் உள்ளதே ஒழிய மாணவர் நலனோ, கல்வி அபிவிருத்தி நலனோ இல்லை. பதவியிலிருப்பவர் அடுத்த பதவியுயர்வை எடுப்பதற்காக அந்த அரசியல்வாதியின் காலடியில் விழும் நிலையில் இருந்தால் எமது நாட்டின் கல்வியின் நிலை எப்படி உயரும் என பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கல்வி அமைச்சு, மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று வடக்கு-கிழக்கில் கல்வித் திணைக்களங்களின் செயற்பாடுகள் எம்மால் திருப்திப்படக்கூடிய வகையில் இல்லை. இவை வடக்கு-கிழக்கு வாழ் அரசாங்க சார்பு அரசியல்வாதிகளை திருப்திப்படுத்துவதற்காக மட்டும் உள்ளதே ஒழிய மாணவர் நலனோ, கல்வி அபிவிருத்தி நலனோ இல்லை. பதவியிலிருப்பவர் அடுத்த பதவியுயர்வை எடுப்பதற்காக அந்த அரசியல்வாதியின் காலடியில் விழும் நிலையில் இருந்தால் எமது நாட்டின் கல்வியின் நிலை எப்படி உயரும்? எப்படியொரு கல்வியினால் உயர்ந்த ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்? உண்மையிலேயே எனது மாகாணத்தில் கல்வித் துறை சார் நிர்வாகம் தொடர் பாக நடைபெறுகின்ற சீர்கேடு களை இந்த உயரிய சபையில் எடுத்துரைப்பதற்கான சந்தர்ப் பமாக இதனை நான் கருது கின்றேன்.-என்றார். (அ-6)

# அதிகாரத்தை கைப்பற்றுவது குறித்தே அரசியல் கட்சிகளுக்கு அதிக கவனம்!

## விக்டர் ஐவன் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 03

இலங்கையின் அரசியல் கட்சிகள் அதிகாரத்தை கைப் பற்றுவது குறித்தே அதிக ஆர்வம் கொண்டுள்ளன என மூத்த பத்திரிகையாளர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் சீர்திருத்தங்க ளுக்கான இயக்கம் ஏற்பாடு செய்த நிகழ்வில் கருத்து தெரி விக்கையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாடு எதிர்கொண்டுள்ள தற் போதைய நெருக்கடிகளுக்கு தீர்வை காண்பதற்கான முயற்சி களை மேற்கொள்வதற்கு பதில் தற்போதைய நெருக்கடியை அதிகாரத்தை கைப்பற்றுவ தற்கான வாய்ப்பாக மாற்றும் முயற்சிகளில் அரசியல் கட்சி கள் ஈடுபட்டுள்ளன.

இந்த ஊழல் மிகுந்த பொல் லாத அமைப்பு முறையை ஆழ மான மாற்றத்திற்கு உட் படுத்தவேண்டும்.

தற்போதைக்கு தேர்தல்கள் எதுவும் இடம்பெறப்போவ தில்லை.

தேர்தலுக்கான நேரம் என ஒன்று உள்ளது. இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் நெருக் கடி உள்ளது. அதிகாரத்திற்கான தாகம் அதிகமாக உள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள தற்போதைய நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு முயல்வ தற்கு பதில் அதிகாரத்தை கைப்பற்றுவது குறித்து அதிக கரிசனையை இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் வெளிப்படுத்துகின்றன.

அமைப்பு முறை மாற்றத் திற்கான தற்போதைய வேண்டு கோள் அரசமைப்புக்குள் இடம்பெறவில்லை -என்றார். (அ)

# குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் கடன் நெருக்கடி தீர சீனா உதவவேண்டும்

## சர்வதேச நாணய நிதியம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 03

உலகின் மிகப்பெரிய கடன் வழங்குநரான சீனா குறைந்த வருமானம் கொண்ட நாடுக ளின் கடன் நெருக்கடியைத் தீர்க்க பொறுப்பான நடவடிக் கைகளை எடுக்க வேண்டும் என எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள் ளது.

உலகின் மிகப்பெரிய இரு தரப்பு கடன் வழங்குநரான சீனா, நெருக்கடி சூழ்நிலை களை சமாளிக்கக் கடனாளி நாடுகளுக்கு எவ்வாறு உத வியை துரிதப்படுத்தலாம் என் பதில் பொறுப்புடன் செயற் படவேண்டும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதாக அதன் தலை வர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா கூறினார்.

அடுத்த வாரம் சீன அரசாங் கப் பிரதிநிதிகளைச் சந்திக்கும் போது இந்த விடயம் குறித்து விவாதித்து மிகவும் பொருத் தமான தீர்விற்கான பொது வான பொறிமுறையை ஏற்றுக் கொள்வோம் என்று நம்புவ தாகவும் அவர் கூறினார். (அ)

# சமூக ஊடகங்களில் துஷ்பிரயோகம் 12 ஆயிரம் வழக்குகள் இதுவரை பதிவு!

கொழும்பு, டிசெ. 03

சமூக ஊடகங்களில் துஷ் பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் கடந்த 10 மாதங் களில் 12 ஆயிரம் வழக்குகள் பதிவாகியுள்ளன என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரி வித்துள்ளார்.

பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் ஊடாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிர யோகம் செய்யப்படுகின்றனர் என்று செய்திகள் வெளியாகி வருகின்றன. பெற்றோர்கள் மற்றும் தகவல் தொழில்நுட் பத்துறை ஆசிரியர்களும் இது போன்ற சம்பவங்கள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு தகவல் தொழில்நுட்பத் துறையைப் பயன்படுத்தி டிஜிற்றல் கல்விக் கொள்கை தயாரிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித் தார். (ஐ)

# 7 புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கு அனுமதி!

கொழும்பு, டிசெ. 03

ஏழு புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வ தற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

ஐக்கிய காங்கிரஸ் கட்சி, இரண்டாம் தலை முறை, இலங்கை சமூக ஜனநாயகக் கட்சி, தேசப் பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, வெகுஜன இளைஞர் முன்னணி, ஈரோஸ் ஜனநாயக முன் னணி மற்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கே அனுமதி வழங்கப்பட்டுள் ளது.

எதிர்வரும் நாட்களில் இந்த கட்சிகள் அங்கீ கரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக ஏற்றுக் கொள்ளப்படுவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித் தார்.

# மருந்து, மருத்துவ உபகரண பற்றாக்குறையால் நான்கு மில்லியனுக்கும் அதிகமானோர் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 03

நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட் டுள்ள மருத்துவப் பற்றாக் குறையினால் நான்கு மில்லி யனுக்கும் அதிகமான மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட் டுள்ளதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் மருந்து மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக பலரும் பாதிக் கப்பட்டுள்ளனர். அந்த வகை யில், கிட்டத்தட்ட மூன்று மில்லியன் மக்கள் தொற்றாத நோய்களுக்கு சிகிச்சை பெறு கின்றனர். ஒரு மில்லியன் மக் கள் தடுக்கக்கூடிய குருட்டுத் தன்மையால் பாதிக்கப்பட்டுள் ளனர். பத்தாயிரம் நோயா ளிகள் இதய அறுவை சிகிச்சை செய்ய நிலுவையில் உள்ளனர்.

மேலும் பத்தாயிரம் புற்று நோயாளிகள் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டுள் ளனர்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செய லாளர் மருத்துவர் ஜயந்த பண் டார, நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல் மற்றும் இதய நோய்கள் போன்ற தொற்றாத நோய்களுக்கு தின மும் சுமார் 3 மில்லியன் மக்கள் மருந்து உட்கொள்வதாக தெரி வித்தார். (அ)

# ஆர்ட்டெமிஸ்:

## நாசாவின் தொலைதூர சாதனையை முறியடித்த ஓரியன் விண்கலன்!


விண்வெளி வீரர்களோடு செல்லும் ஆர்ட்டெமிஸ் பயணம் தற்போது 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் திட்டமிடப்பட் டுள்ளது. விண்வெளி வீரர்கள் நிலவின் மேற்பரப்பில் இறங்குகின்ற ஓரியன் பயணம் 2025 அல்லது 2026 இல் நிகழலாம்.



அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் ஓரியன் விண்கலன், நிலவை சுற்றும் பணியில் ஒரு முக்கிய மைல்கல்லை அடைந்துள்ளது.

திங்கள்கிழமை பூமிக்கு அப்பால் சுமார் 4 லட்சத்து 30 ஆயிரம் கிலோ மீட்டர் (2 லட்சத்து 70 ஆயிரம் மைல் கள்) தூரத்தை இது அடைந்தது. இது வரை விண்வெளி வீரர்களை ஏற்றிச் செல்ல வடிவமைக்கப்பட்ட விண்க லங்கள் பயணித்த தூரத்தை விட இது அதிக தொலைவாகும்.

இந்த விண்கலத்தில் விண்வெளி வீரர்கள் யாரும் பயணிக்கவில்லை. இந்த ஆர்ட்டெமிஸ் விண்கலம் பணியை வெற்றிகரமாக நிறைவு செய்தால், அடுத்த இரண்டு ஆண்டுகளில் விண் வெளி வீரர்களோடு நிலவுக்கு பயணம் மேற்கொள்ளும் திட்டமுள்ளது.




ஓரியன் விண்கலனை கொண்டு நாசா மிகவும் சிக்கலான பயணங் களைத் திட்டமிடுகிறது. அவை அனைத்தும் நாசாவின் ஆர்ட் டெமிஸ் திட்டத்தின் ஒரு பகுதி யாகும்.

50 ஆண்டுகள் இடைவெ ளிக்கு பின்பு, நிலவுக்கு விண் வெளி வீரர்களை கொண்டு செல்ல நாசா இதன் மூலம் திட்டமிடுகிறது. திங்கள்கிழமை எட்டப்பட்ட மைல்கல், இந்த திட்டப்பணி பாதி நிறைவடைந் ததைக் குறிக்கிறது.

நாசாவின் ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் மேலாளர் மைக் சராஃபின் இது பற்றி தெரிவிக் கையில், "இந்த திட்டத்தில் பாதி இலக்கு எட்டப்பட்டிருப்பது, நிலவில் மீண்டும் கால் பதிக்கும் நாட்களை நம்மை எண்ணிப் பார்க்க வைத்துள்ளது" என்றார்.

"இது ஆபத்துகளை குறைக்கவும், விண்வெளி வீரர்களோடு செல்லும் அடுத்த நிலவுப் பயணத்தில் விண்கல செயல்திறனை புரிந்துகொள்ளவும் செய்கிறது." என்கிறார் மைக் சராபின்.

இந்த பயணத்தின் சில சிறந்த காணொளிகளை ஓரியன் மீண்டும் நேரடியாக அனுப்பி வருகிறது. இந்த மைல்கல் தொலைவை அடைவதற்கு சற்று முன்னதாக, பூமிக்கு முன்னால் நகர்ந்து கொண்டிருந்த நிலவை படம்பிடித்தது.

இந்த விண்கலன் புளோரிடாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து நவம்பர் 16ஆம் திகதி 26 நாள் பயணத்தை தொடங்கியது. இதன் அமைப்புகளை விரிவுபடுத்தவும், விண் வெளி வீரர்கள் செல்வதற்கு பாதுகாப் பானதா என்பதை உறுதிசெய்யவும் இது வடிவமைக்கப்பட்டது.

ஐரோப்பிய விண்வெளி அமைப்பு (இஎஸ்ஏ) வழங்கிய இயந்திர தொகுதி ஒன்றின் மூலமே ஓரியன் விண்வெளி யில் சுற்றவைக்கப்படுகிறது. திறம்பட செயல்பட தேவையான இந்த வாகனம் பெரிய உந்துசக்தியை உள்ளடக்கியது.

தொலைதூர வெளிப்புற சுற்றுப் பாதை எனப்படும் நிலவை சுற்றிய ஒரு பெரிய சுற்றுப்பாதையை ஓரியன் அடைவதற்கு இஎஸ்ஏ இரண்டு முக்கிய இயந்திரங்களை வழங்கியது.

நிலவின் மேற்பரப்பிலிருந்து (61,000 கிமீ 38,000 மைல்கள்) ஓரியன் நீண்ட தூரம் செல்வதால் "தொலைவு" என் றும், நிலவின் பயணத் திசைக்கு எதிர் திசையில் விண்கலனை சுற்ற செய்வ தால் இது "நேர்மாறானது" என்றும் அழைக்கப்படுகிறது.

பூமிக்கு திரும்பி வருவதற்கு சரியான பாதையில் விண்கலனை கொண்டு வரு வதற்காக இனி வரும் நாட்களில் மேலும் இரண்டு கவனமான பாதை மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

இந்த விண்கலம் டிசம்பர் 11ஆம் திகதி கலிபோர்னியாவில் உள்ள சான் டியாகோவில் பசிபிக் பெருங்கடலில் இறங்கவுள்ளது.

இதுவரை ஓரியன் செயல்பாடுகளில் கட்டுப்பாட்டாளர்கள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர். இஎஸ்ஏ தொகுதியோடு சென்றுள்ள ஓரியன், எதிர்பார்த்ததை விட மிகக் குறைவான எரிபொருளையே பயன்படுத்தியுள்ளது.



மேலும், எதிர்பார்த்ததை விட அதிக எரிசக்தியை உற்பத்தி செய்துள்ள அதே வேளையில் அதன் எரிசக்தியை செலவு செய்வதும் மிகவும் சிக்கனமாக இருக்கி றது.

சில சிறிய தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளன, ஆனால் 'இதிலிருக்கும் முரண் பாடுகளால் எந்த விளைவு ஏற்படாது," என்கிறார் திரு சராபின்.

ஒரு சமயம் 45 நிமிடங்களுக்கு இந்த விண்கலனின் தொடர்பை கட்டுப்பாட் டாளர்கள் இழந்தனர், ஆனால் இது பூமியில் உள்ள உபகரணங்களின் உள்ள மைவு தொடர்பான சிக்கலால் ஏற்பட் டது என்று முடிவு செய்யப்பட்டது.

முன்னதாக, விண்வெளி வீரர்கள் சென்ற விண்கலம் அடைந்த தொலை தூரத்தின் முந்தைய சாதனை 1970ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அப்போலோ-13 பயணத்தால் உருவாக்கப்பட்டது.

அது பூமியிலிருந்து 4 லட்சத்து 171கிமீ (2 லட்சத்து 48 ஆயிரத்து 655 மைல்கள்) தொலைவு சென்றது, அந்த விண்கல சேவை தொகுதியில் ஏற்பட்ட வெடிப்பைத் தொடர்ந்து அதன் குழு வினர் திரும்பி வருவதற்கு போராடினர்.

ஓரியன் விண்கலத்திலுள்ள மனித உடல் பொம்மைக்கு, கமாண்டர் மூனி கின் காம்போஸ் என்று செல்லப்பெயர் சூட்டப்பட்டது.

சிக்கலில் இருந்த அப்பல்லோ 13-யை மீட்டெடுத்ததில் முக்கி யப் பங்காற்றிய நாசா பொறியா ளரான ஆர்டுரோ காம்போஸின் நினைவாக இந்த பெயர் சூட்டப் பட்டுள்ளது.

விண்வெளி வீரர்களோடு செல்லும் ஆர்ட்டெமிஸ் பயணம் தற்போது 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் திட்டமிடப்பட் டுள்ளது. விண்வெளி வீரர்கள் நிலவின் மேற்பரப்பில் இறங்கு கின்ற ஓரியன் பயணம் 2025 அல்லது 2026 இல் நிகழலாம்.

'நிச்சயமாக, அப்போலோ சாதனை மீது ஆர்ட்டெமிஸ் கட்டமைக்கிறது" என்று நாசா நிர்வாகி பில் நெல்சன் கூறினார்.

'நாங்கள் வெகுதூரம் சென்று பூமிக்கு வேகமாக திரும்பி வருகி றோம் என்பது மட்டுமல்லாமல், ஒரு விரோதமான சூழலில், விண்வெளி யில் தொலைவில் வாழவும், வேலை செய்யவும், புதியவை படைப்பதற்கும், இறுதியாக, மனிதர்களுடன் செவ்வாய் கிரகத்திற்குச் செல்வதற்கான வழியையும் ஆர்ட்டெமிஸ் வகுக்கிறது" என்கிறார் பில் நெல்சன்.





# பெண்கள்-சிறுமிகள் மீது இலங்கையில் தொடரும்

## பாலியல் - கொடுமைகளும் கொலைகளும்

உலகளவில் 81,000 பெண்கள் மற்றும் சிறுமிகள் 2020 இல் கொல்லப்பட்டனர். அவர்களில் சுமார் 47,000 பேர் (58சதவீதம்) நெருங்கிய உறவை கொண்டிருந்தவர் (காதலர், நண்பர்) அல்லது குடும்ப உறுப்பினரின் கைகளால் கொல்லப்பட்டுள்ளனர். இது ஒவ்வொரு 11 நிமிடங்களுக்கு ஒரு பெண் - சிறுமி தனது வீட்டில் கொல்லப்படுகிறாள் என காணிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் இந்த தகவலை, கடந்த வருடம் வியன்னாவில் (ஆஸ்திரியா), 25 நவம்பர் 2021 அன்று வெளியிட்டுள்ள தரவுகளின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.



பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தன்று வெளியிடப்பட்ட இந்த ஆய்வு சுருக்கமானது, 95 நாடுகளில் இருந்து நெருகமானவர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களால் பெண்கள் மற்றும் சிறுமிகளை, பாலின அடிப்படையில் கொலைகள் பற்றிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டதும் ஆகும்.

ஐக்கிய நாடுகள் சபையானது, “பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - விழிப்புணர்வு தினமாக” கார்த்திகை 25 ஆம் திகதியை, 2000ஆம் ஆண்டு அறிவித்தது.

வரலாற்று ரீதியாக, இந்த திகதி டொமினிகன் குடியரசின் அரசியல் போராளிகளான மிராபால் சகோதரிகள் (3 பேர் ) 1960 இல் படுகொலை செய்யப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டது. கொலைகள் டொமினிகன் சர்வாதிகாரி ரபேல் ட்ருஜிலோ (1930-1961) ஆல் உத்தரவிடப்பட்டது. 1981 ஆம் ஆண்டில், லத்தீன் அமெரிக்கன் மற்றும் கரீபியன் பெண்ணியவாத “என்குவென்ட்ரோஸின்” ஆர்வலர்கள் நவம்பர் 25 ஆம் திகதியை பெண்களுக்கு எதிரான வன்முறையை மேலும் பரந்த அளவில் எதிர்த்துப் போராடுவதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஒரு நாளாகக் குறித்தனர். பிப்ரவரி 7, 2000 அன்று, கார்த்திகை 25 திகதி அதன் அதிகாரப்பூர்வ நாளாக ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்தை இயற்றியது.

இலங்கையை பொறுத்தமட்டில் , கோவிட்- 19 தொற்றுநோய்க்கு மத்தியில், லாக்டவுன் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை வழக்குகள் அதிகரித்திருப்பதாகச் சான்றுகள் தெரிவிக்கின்றன. தொற்றுநோய்க்கு முன்பே, பெண்களின் வாழ்வியல் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் கணக்கெடுப்பின்படி, இலங்கையில் 5 இல் 1 (20.4 வீதம்) பெண்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு நெருங்கிய துணையினால்- அல்லது நெருக்கனான குடும்ப உறவினர் ஒருவரினால் பாலியல் மற்றும்- அல்லது உடல்ரீதியான வன்முறையை அனுபவி கிறார்கள். மற்றும் இலங்கையில் 4 பெண்களில் 1 பெண் (24.9 வீதம்) 15 வயதிலிருந்து (2019) பாலியல் மற்றும்- அல்லது உடல் ரீதியான வன்முறையை அனுபவித்துள்ளனர் என்று அந்த கணக்கெடுப்பு கூறுகிறது.

தற்போது இலங்கை தள்ளப்பட்டுள்ள பொருளாதார நிலைமை காரணமாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகள், பாலியல் சுரண்டல்கள் - குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

வெளிநாடுகளுக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்பை அடிப்படையாக கொண்டு பயணப்பட்ட பெண்கள் பல நூற்றுக்கணக்கில், பாலியல் வியாபாரத்தில் ஈடுபட வைக்கும் நோக்கில் அடிமைகளாக விற்கப்பட்டுள்ளனர். ஓமான், சவுதி அரபியா தொடக்கம் கிழக்கு ஐரோப்பா வரை இலங்கையின் சிறுமிகளும், பெண்களும் பாலியல் வியாபாரத்துக்காக அடிமைகளாக அனுப்பபட்டுள்ளனர். இதற்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்க தயாரில்லாத டொலருக்காக எதையும் விற்க தயாராகவிருக்கும் அரசு, பாலியல் வியாபாரத்துக்கு விற்கப்பட்டவர்கள் சட்டத்துக்கு முரணாக வெளிநாடு சென்றவர்கள் என்றும் கூறுகிறது. ஆதலினால் தம்மால் எதுவும் செய்ய முடியாதென்றும் கை விரிந்துள்ளது !



உள்நாட்டை பொறுத்த மட்டில் பொருளாதார வீழ்ச்சியானது 55 வீதமான பெண்களை நேரடியாக பாதித்துள்ளது. வடக்கு-கிழக்கு உட்பட மலையகம், மற்றும் இலங்கையின் தென்பகுதி பெண்கள் பாரிய சமூக -பொருளாதர பாதுப்புகளுக்கு ஆளாகி உள்ளனர்.

தொழில்வாய்ப்பை இழத்தல், வருமானத்தில் கிடைக்கும் சம்பள பணத்தின் பெறுமதி இழப்பு, மற்றும் விலைவாசி ஏற்றத்தினால் பொருளாதர வறுமை அதிகரித்துள்ளது. அத்துடன், போதைவஸ்து - மதுபாவனையால் ஏற்படும் குடும்ப வன்முறைகள், ஏற்கனவே சமூகத்தில் நிலவும் ஆம்பிளை தனத்தால் ஏற்படும் கொலைகள் - பாலியல் வல்லுறவுகளின் அளவும் அதிகரித்துள்ளது.

பெண்கள் மற்றும் சிறுமியரின் வாழ்நிலை வன்முறையும் சுரண்டலும் நிறைந்ததாக இருக்கும் இன்றய நிலையில், ஆசிரியைகள் என்ன விதமான உடைகளில் பாடசாலைக்கு வருகின்றனர் என்பது, ஏதோ , இலங்கையின் முதல் முக்கிய பிரச்சனை என்பது போல பாவனை காட்டுகிறது அரசு. அதேவேளை, அரசுக்கு எதிராக போராட நினைப்பவர்களுக்கு எதிராகதான் “எந்தவிதமான வன்முறையையும் பிரயோகிக்க தயங்க மாட்டேன்” என்று ரணில் நேற்று 22.11.2022 அன்று பாராளுமன்றத்தில் - ஆணாதிக்கவாதிகள் கரகோஷம் இசைக்க அறிக்கையிட்டார்.

இலங்கை மக்கள் அனைவர் மீதும் திணிக்கப்பட்டுள்ள பொருளாதார சுமைகளுக்கு எதிராகவும்- அதிகார வர்க்கத்தின் கொடுங்கோன்மைக்கு எதிராகவும் போராடும் அதேவேளை, பெண்கள் -சிறுமிகள் மீதான ஒடுக்குமுறைகள், சுரண்டல்களுக்கு எதிராகவும் எல்லா தளங்களிலும் போராட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும்.

**- பெண்நலன்விரும்பி**

**வெளிநாடுகளுக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்பை அடிப்படையாக கொண்டு பயணப்பட்ட பெண்கள் பல நூற்றுக்கணக்கில், பாலியல் வியாபாரத்தில் ஈடுபட வைக்கும் நோக்கில் அடிமைகளாக விற்கப்பட்டுள்ளனர். ஓமான், சவுதி அரபியா தொடக்கம் கிழக்கு ஐரோப்பா வரை இலங்கையின் சிறுமிகளும், பெண்களும் பாலியல் வியாபாரத்துக்காக அடிமைகளாக அனுப்பபட்டுள்ளனர்.**

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


- 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. "பல்கலைக்கழகம்" எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

03.12.2022
சனிக்கிழமை

CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

CHANNEL - 2

03.12.2022
சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# புதிய முஸ்லிம் கட்சி கிழக்கில் உதயமானது

நிந்தவூர், டிசெ. 03

கிழக்கு மாகாணத்தில் புதிதாக உதயமாகும் முஸ்லிம் அரசியல் கட்சி ஒன்றின் அறிமுக நிகழ்வுடன் கூடிய, முழு நாள் மாநாடு ஒன்ற எதிர்வரும் 4 ஆம் திகதி கல்முனையில் நடைபெறவிருக்கின்றது.

கிழக்கில் இயங்கிவரும் சிவில் அமைப்பான சமத்துவ முற்போக்கு முன்னணியின் ஏற்பாட்டிலும், முன்னணியின் தலைவர் சட்டத்தரணி வை.எல்.எம்.யூசுப் தலைமையிலும், இந்த அறிமுக நிகழ்வுடன் கூடிய மாநாடு நடைபெறவிருக்கின்றது.

கல்முனை ஆஸாத் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டின் சிறப்பம்சமாக, மேற்படி சமத்துவ முற்போக்க முன்னணியின் அரசியல் பிரிவாக ஆரம்பிக்கப்படும் சமத்துவ மக்கள் முன்னணி எனும் அரசியல் கட்சியின் அறிமுக நிகழ்வு இடம்பெறும்.

அதேவேளை முஸ்லிம் சமூகத்தின் அரசியல், கல்வி, பொருளாதார மறுமலர்ச்சி தொடர்பான தெளிவூட்டல்கள் கருத்துப்பரிமாற்றங்களும், கலந்துரையாடல்களும் மாநாட்டில் இடம்பெறவுள்ளதாக தலைவர் டாக்டர். யூசுப் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கிலிருந்து முஸ்லிம் புத்தி ஜீவிகள், உலமாக்கள், சமூக ஆர்வலர்கள் என இருநூறு பேர் இந்த சிறப்பு மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகத்தின் தலைவிதியை சரியாகத்திருத்தி எழுதி பூனைக்கு மணி கட்டுவதற்காக, சமத்துவ முற்போக்கு முன்னணி இப்புதிய பயணத்திற் குத்தயாராகியுள்ளதாகவும்,

மக்களின் கட்டுப்பாட்டிலுள்ள அரசியல் சக்தியாக, தமது புதிய அரசியல் கட்சியான சமத்துவமக்கள் முன்னணி திகழ்ந்து முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும், இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்க்கவும் முனைப்புடன் செயற்படவுள்ளதாகவும் யூசுப் கருத்து வெளியிட்டார். (அ-06)



# புதியதொரு கட்டடத்தில் கல்முனை கல்வி வலயம்

அம்பாறை, டிசெ. 03

கல்முனை வலயக் கல்விக் காரியாலயம் புதிய கட்டடத்துக்கு இடம் மாறி உள்ளது.

இக் காரியாலயம் இதுவரை காலமும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் பாடசாலையில் இயங்கி வந்தது.

கல்முனை கல்வி வலய காரியாலயம் சுனாமிக்கு பிற்பாடு தற்காலிகமாக மேற்படி பாடசாலையில் கடந்த 16 வருடங்களாக பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் இயங்கி வந்தது.

இதனை நிரந்தரமாக புதிய வசதிகள் நிறைந்த கட்டடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கல்முனைக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட புதிய வலய கல்வி பணிப்பாளர் எம்எஸ் எஸ். சஹறுதுல் நஜீம் துரித நடவடிக்கை எடுத்தார்.

மூன்றரை மாத காலத்திற்குள் புதிய கட்டடத்துக்கு இடமாற்ற கட்டடம் தயாரானது.

அதன்படி கடந்தவாரம் பால் காய்ச்சி விருந்துடன் புதிய கட்டிடத்திற்கு காரியாலயம் இடம் மாறி உள்ளது.

கல்முனை வாடிவீட்டு வீதியில் உவெஸ்லி கல்லூரியின் தென்புற வாயிலை தாண்டியவுடன் வலது பக்க வீதியிலே இந்த காரியாலயம் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. (அ)

# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் எல்லைகளை அடையாளப்படுத்துக!

மட்டக்களப்பு, டிசெ. 03

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் எல்லைகளை அடையாளப்படுத்தி தந்துதவுமாறு கோரி,




மாஞ்சோலை பிரதேச சமூக அமைப்புக்களினால் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராசாவிடம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி வர்த்தகர் சங்கத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான ஏ.சீ.எம்.நியாஸ்தீன் ஹாஜியார் மற்றும் கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கே.எல். அஸ்மி தலைமையிலான குழுவினர் மகஜரைக் கையளித்தனர்.

அண்மைக்கால மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவிலுள்ள கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட காணிகளை கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகம் கையகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன், அத்துமீறி எல்லை இடும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைக் கருத்திற் கொண்டே ஓட்டமாவடி பிரதேச செயலக எல்லையை அடையாளப்படுத்துமுகமாக இக்கோரிக்கை சமூக மட்ட அமைப்புக்களினால் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மட்டக்களப்பில் “மனுஷி” வெளியீடு

நிந்தவூர், டிசெ. 03

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளரும், தற்போது புலம் பெயர்ந்து சுவிற்சர்லாந்து நாட்டில் தமிழ் இலக்கியத்தளத்தில் இயங்கிவருபவருமான சண்.தவராஜாவின் “மனுஷி” சிறுகதை நூல் வெளியீடும், அறிமுக நிகழ்வும் மட்டக்களப்பில் இடம்பெறவிருக்கிறது.

மட்டக்களப்பு மகுடம் கலை, இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி கலை, இலக்கிய நிகழ்வின் 47 ஆவது தொடராக எதிர்வரும் டிசெம்பர் 7 ஆம் திகதி இந்த நூல் வெளியீடும், அறிமுக நிகழ்வும் நடைபெற விருக்கின்றது.

பிரபல இலக்கிய கர்த்தா பேராசிரியர் செ. யோகராசா தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது.

மகுடம் வி.மைக்கல் கொலினின் வரவேற்புரையுடன் இடம்பெறவிருக்கும் இந்த வெளியீட்டு விழா நிகழ்வில், கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா. செல்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மேலும் நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. ரூபிவலண்டினா பிரான்சிஸ், நூல் நயவுரையாற்றுவதுடன், ஏறாவூர் தமிழ் மகா வித்தயாலய அதிபர் கவிதாயினி திருமதி. சுதாகரி மணிவண்ணன் சிறப்புரையும் ஆற்றுவர்.

மூத்த எழுத்தாளர்களான எஸ்.எல்.எம்.ஹனீபா, கவிஞர் செ.குணரத்தினம், கவிஞர். அ.ச. பாய்வா ஆகியோர் “மனுஷி முதன்மைப் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதுடன், நூலாசிரியர் சண். தவராஜா சுவிட்சர்லாந்திலிருந்து சூம் தொழில் நுட்பம் மூலம் ஏற்புரையும் ஆற்றுவார். (அ-06)

# சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸாரின் நினைவு வவுணதீவில் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 03

மட்டக்களப்பு, வவுணதீவு வலையிறவு பொலிஸ் சோதனைச் சாவடியில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இரு பொலிஸாரின் 4ஆம் ஆண்டு நினைவேந்தல், கடந்த புதன் கிழமை இரவு வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தலைமையில் பொலிஸ் நிலையத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

அவ்விருவரினதும் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி சுடர் ஏற்றி, பொலிஸார் மௌன அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வலையிறவு சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த



பொலிஸ் கான்ஸ்டபிள்களான கணேஸ் தினேஸ், நிரோசன் இந்திக பிரசன்ன ஆகிய இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரானின் குழுவினரால் கத்தியால் குத்தியும் துப்பாக்கியாலும் சுட்டுக்கொலை செய்யப்பட்டு அவர்களின் துப்பாக்கிகள் அபகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிண்ணியாவில் சுற்றுலா நீதிமன்று

மட்டக்களப்பு, டிசெ. 03

கிண்ணியா சுற்றுலா நீதிமன்றம், நீதிபதி பயாஸ் ராசாக்கினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கிண்ணியா துறையடியில் அமைந்துள்ள, கிண்ணியா நகர சபைக்கு சொந்தமான வாடி வீட்டு கட்டடம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குற்றவியல் (நீதிவான் நீதிமன்றத்துக்கு உட்பட்ட ) வழக்குகள் அனைத்தும் இங்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வியாழக் கிழமை தோறும் வழக்கு விசாரணைகள் நடைபெறும்.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம்.கனி, கிண்ணியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், சட்டத்தரணிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

## சேவல் மீது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார் வைத்தியர்

புதுடில்லி, டிசெ. 03

இந்தியாவின் இந்தூர், பலாசியா பகுதியில் உள்ள கிரேட்டர் கைலாஷ் வைத்திய சாலை அருகே வசிக்கும் அலோக் மோடி. என்பவர் பொலிஸ் நிலையத்தில் சேவல் மீது முறையாடு அளித்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில்-

எனது அயல் வீட்டில் உள்ள ஒரு பெண் ஒருவர் கோழி, சேவல் உள்ளிட்டவற்றை வளர்த்து வருகிறார். அந்த சேவல் கோழிகள் தினமும் அதிகாலை தவறாது 5 மணிக்கெல்லாம் கூவுகிறது.

இதனால் வேலை முடிந்து தாமதமாக வீட்டுக்கு வந்து ஓய்வெடுக்கலாம் என்ற போது சேவல் கூவி தூக்கத்தைக் கலைத்து விடுகிறது. அது முற்றிலும் தமக்கு எரிச்சலூட்டுவதாக இருக்கிறது-என்றார்.

இந்நிலையில்,அலோக் மோடியின் முறைப்பாட்டை உறுதிப்படுத்திய பலாசியா பொலிஸ் நிலைய பொறுப்பாளர், இரு தரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தி சுமூக முடிவு எட்டப்படாவிட்டால் சேவல் கூவும் சிக்கலை தீர்க்க குற்றவியல் நடைமுறையைப் பின்பற்றுவோம். பொது இடத்தில் சட்டவிரோதமாக தொந்தரவு செய்வது என்ற சட்டப்பிரிவு 133 இன் படி நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்தார். (அ)

# வடகொரிய மூத்த அதிகாரிகள் மூவர் மீது பொருளாதாரத் தடை!

## அமெரிக்கா அதிரடி நடவடிக்கை

நியூயோர்க், டிசெ. 03

வடகொரியாவின் சமீபத்திய ஏவுகணை சோதனைகளுடன் தொடர்புடைய மூன்று வட கொரிய மூத்த அதிகாரிகள் மீது அமெரிக்காவும் அதன் ஆசிய நட்பு நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இதன்படி, ஆயுதங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்த ஜோன் இல் ஹோ, யு ஜின் மற்றும் கிம் சு கில் ஆகியோர் மீது இந்த தடைகள் விதிக்கப்பட்டுள் என.

இவர்கள் மீது ஜப்பான், தென் கொரியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இந்த புதிய தடைகளின் கீழ், வடகொரிய அதிகாரிகளின் அமெரிக்காவை தளமாகக் கொண்ட அனைத்து சொத்துக்களும் முடக்கப்படும். அமெரிக்காவில் உள்ள எந்தவொரு வணிகம் அல்லது தனி நபருடனான எந்தவொரு பரிவர்த்தனையிலிருந்தும் அவர்கள் தடுக்கப்படுவார்கள்.

அமெரிக்க வெளியுறவுத்துறையின் அறிக்கையில், 'இன்றைய நடவடிக்கைகள் கொரியா மற்றும் ஜப்பான் குடியரசுடன் நெருக்க மான ஒருங்கிணைப்பில் எடுக்கப்பட்டுள்ளன, மேலும் உலகளாவிய வட கொரியாவின் அச்சுறுத்தல் தொடர்பாக எங்கள் ஐரோப்பிய ஒன்றிய பங்காளிகளுடன் எங்கள் கொள்கைகளை மேலும் சீரமைக்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் பியோங்யாங்கின் வேகம், அளவு மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை ஏவுதலின் நோக்கம் ஆகியவற்றிற்கு பதிலளிக்கும் வகையில் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கான எங்கள் நிலையான தீர்மானத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா இந்த ஆண்டு 60க்கும் அதிகமான பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியது மற்றும் பல கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்தது.

வடகொரியா பல ஆண்டுகளாக மேற்கத்திய நாடுகளால் விதிக்கப்பட்ட கடுமையான தடைகளை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடகொரியா நவம்பர் 18ஆம் திகதி தனது கடைசி ஏவுகணை சோதனையை முன்னெடுத்திருந்தது. அது, அமெரிக்க நிலப்பரப்பைத் தாக்கும் அளவுக்கு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையாக வடிவமைக்கப்பட்டிருந்தது என ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

இது ஹொக்கைடோவிற்கு மேற்கே சுமார் 210 கிமீ (130 மைல்) தொலைவில் கடலில் விழுந்ததாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

வடகொரியா 2006 மற்றும் 2017ஆம் ஆண்டுகளுக்கு இடையில் ஆறு அணுகுண்டு சோதனைகளை நடத்தியது.

மேலும் ஏழாவது சோதனைக்கான தயாரிப்புகளை முடித்துள்ளதாக கூறப்படுகிறது. ஒரு சிறிய அணுசக்தி சாதனத்தை சோதிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தலாம் என்று நிபுணர்கள் நம்புகின்றனர். வடகொரியா தனது குறுகிய தூர ஏவுகணைகள் மற்றும் வழக்கமான இராணுவ திறன்களை மேம்படுத்த முயற்சிப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். (அ)

# பிரேசிலில் கனமழை!

## வெள்ளத்தில் சிக்கியவர்கள் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்பு



பிரேசிலியா, டிசெ. 03

பிரேசிலின் சாண்டா கேடரினா மாகாணத்தில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் இராணுவ ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டன.

அந்த மாகாணத்தில் இடைவிடாமல் கொட்டித் தீர்த்த கனமழையால் 17 நகரங்களில் அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. ஏராளமான வீடுகளை வெள்ளம் சூழ்ந்து பொது மக்கள் தத்தளித்து வருகின்றனர்.

தொடர் மழை பெய்த வண்ணமாக இருப்பதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதியில் வீட்டின் மேல்தளத்தில் சிக்கித் தவித்தவர்கள் ஹெலிகொப்டர் மூலம் பத்திரமாக மீட்கப்பட்டனர். (அ)

# ரஷ்யாவுடனான போரில் 13,000 வீரர்கள் இறந்தனர்

## உக்ரைன் அரசு தகவல்

கீவ், டிசெ. 03

ஒன்பது மாதங்களுக்கு முன்னர் ரஷ்யாவின் படையெடுப்பு ஆரம்பித்ததில் இருந்து 13,000 வீரர்கள் போரில் கொல்லப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியின் ஆலோசகரான மைக்கைலோ பொடோலியாக் இதனை தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் பிற்பகுதியில் ஏறக்குறைய 9,000 துருப்புக்கள் இறந்ததாக ஆயுதப் படைகளின் தலைவர் கூறிய பின்னர் புதிய எண்ணிக்கை வெளியாகியுள்ளது.

10,000 முதல் 12,500 முதல் 13,000 வரையபனவர்கள் கொல்லப்பட்டனர் என்று போடோலியாக் வியாழக்கிழமை உக்ரைனின் சனல் 24 இடம் கூறினார்.

“இறந்தவர்களின் எண்ணிக்கையைப் பற்றி நாங்கள் வெளிப்படையாக பேசுகிறோம்,” என்று அவர் மேலும் கூறினார். இறந்தவர்களை விட அதிகமான



வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

உக்ரைனின் ஆயுதப் படைகளால் இராணுவ உயிரிழப்புகளின் எண்ணிக்கை உறுதிப்படுத்தப்படவில்லை. “சரியான தருணம் வரும்போது” அதிகாரபூர்வ தரவை ஜெலன்ஸ்கி பகிரங்கப்படுத்துவார் என்று பொடோலியாக் மேலும் கூறினார்.

கடந்த மாதம், அமெரிக்காவின் உயர்மட்ட ஜெனரல், உக்ரைனில் 100,000 க்கும் மேற்பட்ட ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டு அல்லது காயமடைந்திருக்கலாம். உக்ரைன் தரப்பிலும் இதே எண்ணிக்கையானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறினார்.

ஜெலன்ஸ்கியின் ஆலோசகர், புதன்கிழமை ஒரு வீடியோ நேர்காணலில் பேசுகையில், ரஷ்ய இறப்பு எண்ணிக்கை உக்ரைனை விட ஏழு மடங்கு அதிகம் என்று கூறினார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இரண்டும் தங்கள் துருப்புக்களின் மன உறுதியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக தங்கள் இழப்புகளைக் குறைப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இதனால் உக்ரைன் வெளியிட்டுள்ள எண்ணிக்கை மிகக்குறைவாக இருக்கலாமென கருதப்படுகிறது. (அ)

# உக்ரைன் தூதரகத்துக்குள் வெடித்த கடித வெடிகுண்டு

## ஸ்பெயினில் ஒருவர் காயம்



மட்ரிட், டிசெ. 03

ஸ்பெயின் நாட்டின் மட்ரிட் நகரில் உள்ள உக்ரைன் தூதரகத்தில் கடித வெடிகுண்டு வெடித்ததில் ஊழியர் ஒருவர் காயம் அடைந்துள்ளதாக அந்த நாட்டின் உள்துறை மற்றும் இராணுவ அமைச்சகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், நேற்று முன் தினம் மட்ரிட் நகருக்கு வெளியே உள்ள ஜார கோசா நகரில் விமானப்படை தளத்தில் கடித வெடிகுண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள தொழிற்சாலையில்தான் கையெறி குண்டு லோஞ்சர்கள் தயாரிக்கப்பட்டு உக்ரைனுக்கு அனுப்பப்படுகின்றன.

உக்ரைன் தூதரகத்தில் வெடித்த கடித வெடிகுண்டும், விமானப்படைத் தளத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள கடித வெடிகுண்டும் ஒரே நபரால் அனுப்பப்பட்டது என தெரிய வந்துள்ள நிலையில் இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ)

# பாதாளக் குழுக்களுக்கு முடிவு கட்ட விசேட அதிரடிப்படை களமிறக்கம்!

## பொது பாதுகாப்பு அமைச்சின் செயலர் தகவல்

கொழும்பு, டிசெ. 03

**“பாதாளக் குழுக்களை ஒடுக்குதல் மற்றும் போதைப்பொருள் விற்பனையை தடுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக விசேட அதிரடிப்படையினரை முழுமையாக ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.”- என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.**

**அவர் மேலும் கூறியவை வருமாறு:**

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களால் சிறைச்சாலை நிரம்பியுள்ளது. அத்துடன், ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்தால் மரண தண்டனை விதிக்கும் வகையில் தற்போது சட்டத் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, புனர்வாழ்வளிக்கும் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்த வேண்டியுள்ளது. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலைக்கு கொண்டுவராமல், அவர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தல் பற்றி கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

போதைப்பொருள் என்பது சர்வதேச வலைப்பின்னலுடன் தொடர்புபட்டது. பாதாளக் குழுக்களுடன் தொடர்புபட்டுள்ளன. இவற்றை கட்டுப்படுத்துவதென்பது இலகுவான விடயமல்ல. போதைப் பொருள் விவகாரம் தொடர்பில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

எதிர்காலத்தில் பாதாள குழுக்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் போதைப்பொருளை தடுத்தல் போன்ற பணிக்காக மட்டும் விசேட அதிரடிப்படை முழுமையாக ஈடுபடுத்தப்படும். இதன் முதற்கட்டமாக ஏனைய பணிகளில் இருந்து விசேட அதிரடிப்படையினர் விடுவிக்கப்படவுள்ளனர். 600 பேரை விசேட அதிரடிப்படைக்கு இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

# துறைமுக அதிகார சபை ஊழலை கண்டறிவதற்காக குழு நியமனம்

கொழும்பு, டிசெ. 03

இலங்கை துறைமுக அதிகார சபையில் இடம்பெற்ற ஊழல் மற்றும் முறைகேடுகளை கண்டறிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் மூவர் உள்ளனர்.

அதன்படி, எம்.டி.எஸ்.ஏ. பெரேரா, காமினி குமாரசிறி மற்றும் கேஜிபி வசந்த கமகே ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

துறைமுக அதிகாரசபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய தரப்பினரும் இந்தக் குழுவிற்கு அதிகார சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குழுவுக்கு கிடைத்த அனைத்து முறைப்பாடுகளையும் விசாரித்து, குழுவின் அறிக்கை 6 மாதங்களுக்குள் பாடத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் ஒப்படைக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ்.ருவன் சந்திரா தெரிவித்தார். (அ)

# இறப்பர் செய்கையாளர்கள் பெரும் நெருக்கடியில்

கொழும்பு, டிசெ. 03

நாட்டின் பல பாகங்களிலும் இறப்பர் செய்கையாளர்கள் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் இருந்து இறப்பர் பால் இறக்குமதி செய்யப்படுவதாலேயே உள்ளூர் இறப்பர் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக கேகாலை மாவட்ட இறப்பர் பாலை சேகரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.பி.அபேரத்ன தெரிவித்தார்.

இதனால் இறப்பர் செய்கையாளர்கள் இந்த தொழிலை கைவிட்டு விட்டு வேறு தொழிலுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# ஜனாதிபதிக்கான ஒதுக்கீட்டில் 57 வீதத்தை ஊழியர்களுக்கு பயன்படுத்திய மைத்திரி!

கொழும்பு, டிசெ. 03

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தனிப்பட்ட ஊழியர்களுக்காக ஜனாதிபதி ஒதுக்கீட்டில் 43 வீதத்தையும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 57 வீதத்தை பயன்படுத்தினர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம் வழங்கிய தகவலில் தெரியவந்துள்ளது.

அந்தத் தகவல்களின்படி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2010 முதல் 2014 வரை 630 மில்லியன் ரூபாயைச் செலவிட்டுள்ளதுடன், 2 ஆயிரத்து 578 தனியார் ஊழியர்களைப் பணிக்கமர்த்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆயிரத்து 317 தனிப்பட்ட ஊழியர்களைக் கொண்டிருந்ததுடன், 2015 முதல் 2019 வரை 850 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக செலவிட்டுள்ளார்.

தொடர்ந்து பதவியேற்ற இரண்டு ஜனாதிபதிகளும் தமது தனிப்பட்ட ஊழியர்களை பராமரிப்பதற்காக 1480 மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவிட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம் வழங்கிய தகவலில் தெரிய வந்துள்ளது.

பொது நிதியை துஷ்பிரயோகம் செய்வதை தவிர்ப்பேன் என மீண்டும் வலியுறுத்தி ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிக செலவில் தனியார் ஊழியர்களை பராமரிப்பதில் முன்னோடிகளை மிஞ்சியுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாற்றுக் கொள்கை மையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் லயனல் குருகே 2019ஆம் ஆண்டு உரிய தகவல்களை கோரியிருந்தபோதிலும் ஜனாதிபதி செயலகம் அதனை நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி செயலகத்தின் தீர்மானத்திற்கு எதிரான மேன்முறையீட்டை பரிசீலித்த தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உத்தரவின் அடிப்படையில், 2022 நவம்பர் 14 ஆம் திகதி இது தொடர்பான தகவல்களை வெளியிட அதிகாரிகள் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மாங்குளத்தில் வீட்டிலிருந்து துப்பாக்கிகள், மான்கொம்பு!

முல்லைத்தீவு, டிசெ. 03

மாங்குளம் கல்கூவாறி பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் உள்ளூர் நான்கு மான் கொம்புகள், இரண்டு துப்பாக்கிகள், 100 கிராம் ஈயம், தீக்குச்சி மருந்து, துப்பாக்கிரவைகள் மற்றும் வாள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகன் திணைக்களத்தினர் நேற்று முன்தினம் மாங்குளம் பகுதியில் உள்ள கல்குவாரிப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்தவேளை கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இவைகள் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (அ)

# பட்ஜெட் தயாரிக்க உதவாத செயலர்களுக்கு இடமாற்றம்

கொழும்பு, டிசெ. 03

வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு உதவி செய்யாத அமைச்சுக்களின் செயலாளர்கள் பலருக்கு ஜனவரி மாதமளவில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறான செயலாளர்களின் பெயர்ப் பட்டியலை ஜனாதிபதி செயலாளரிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களைப் பணித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்குச் சில செயலாளர்கள் உதவவில்லை என்று சில அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டதைத் தொடர்ந்தே ஜனாதிபதி மேற்படி முடிவை எடுத்துள்ளார். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்

துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்

ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்

டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்

விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# வடக்கு - கிழக்கில் கண்ணிவெடி அகற்றுவதற்கு 648,148 டொலர்!

## நிதியுதவி வழங்கியது ஜப்பான் அரசு

கொழும்பு, டிசெ. 03

**இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக ஜப்பான் அரசாங்கம் 6 இலட்சத்து 48 ஆயிரத்து 148 அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.**

கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகம், ஜப்பானின் தூதுவர் மிசுகோசி மற்றும் 'மக்' ஆலோசனைக் குழுவின் இலங்கைக்கான பணிப்பாளர் கிறிஸ்ரி மக்லினன் ஆகியோருக்கு இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஜப்பானின் உதவியுடன் 'மக்' குழுவால் அமுல்படுத்தப்பட்ட 14ஆவது கண்ணிவெடி அகற்றும் திட்டம் இதுவென ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த புதிய திட்டமானது மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மேலதிகமாக 259,464 சதுர மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகளை அகற்றவுள்ளது.

இதேவேளை, முந்தைய 13 திட்டங்கள் 15 ஆயிரத்து 831 கண்ணிவெடிகள் மற்றும் பிற வெடிகுண்டுகளை அகற்றியுள்ளன என்றும் ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# யாழ். மாநகர சபை செயல்பாட்டுக்கு எதிராக 3ஆவது நாளாகவும் தொடர்ந்தது போராட்டம்!



யாழ்ப்பாணம், டிசெ. 03

கல்லூண்டாயில் யாழ். மாநகர சபையினர் குப்பை கொட்டுவதற்கு எதிராக வலி. தென்மேற்கு பிரதேச சபையினரால் கல்லூண்டாய் வைரவர் ஆலயத்துக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த போராட்டம் கடந்த 30ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் நேற்று மூன்றாவது நாளாகவும் நடைபெற்றது.

கடந்த 30ஆம் திகதி யாழ். மாநகர சபையினர் வழமையாக குப்பை கொட்டும் கல்லூண்டாய் பகுதிக்கு குப்பை கொட்டச் சென்றவேளை, குப்பைகளை ஏற்றிவந்த எட்டு வாகனங்கள் வழிமறிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டன.

ஆனால் நேற்று அங்கு எந்த குப்பை ஏற்றும் வாகனங்களும் வரவில்லை.

இந்நிலையில் மூன்றாவது நாளாகவும் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# திரிபோஷ உற்பத்தி ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 03

மக்காச்சோளம் இருப்புக்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் திரிபோஷ உற்பத்தியை மீள ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்தார்.

நாளொன்றுக்கு ஏறக்குறைய 60,000 திரிபோஷா பொதிகளை உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகம் செய்வதோடு தாய்மார்களுக்கான திரிபோஷா உற்பத்தி தொடரும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# அட்டை பண்ணைக்கு எதிராக அனலைதீவில் ஆர்ப்பாட்டம்!



யாழ்ப்பாணம், டிசெ. 03

அனலைதீவு துறைமுகத்தில் அட்டைப் பண்ணைக்கு எதிராக நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அனலைதீவு கடற்றொழிலாளர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் மீனவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

அட்டைப் பண்ணையால் மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. மீன்களின் இனப்பெருக்கத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது.

பல தடவைகள் பல தரப்பினருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியும் உரியவர்கள் மீனவர்களது நிலையை கருத்தில் கொண்டு தீர்வு வழங்கவில்லை.

மீனவர்களது நிலையைக் கருத்தில் கொண்டு தீர்வு வழங்குமாறு கோரி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கிறோம் - என்றனர்.

போராட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் தேவையில்லை

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, டிசெ. 03

மின்சாரக் கட்டணத்தை திருத்துமாறு மின்சார சபை கோரவில்லை எனவும் தற்போது கட்டணத் திருத்தம் தேவையில்லை எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பாக மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பல்வேறு முரண்பாடான கருத்துக்களை முன்வைத்து வந்தன.

இந்த நிலையில், இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய, அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஜனவரி மற்றும் ஜூன் மாதத்தில் கட்டணத்தை அதிகரிக்க அனுமதிவழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால் கால நிலை மாற்றத்துடன் பாரிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்யும் வகையில் இந்த கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாக கூறுபடுகிறது. கட்டணத்தை அதிகரிப்பதால் அதனை செய்ய முடியாது - என்றார். (அ)

# மரண அறிவித்தல்



**திருமதி**
**சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை**

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், செட்டியார் தெரு, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை கடந்த 28.11.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வைத்தியலிங்கம் சங்கரப்பிள்ளை அவர் களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் – மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்தியலிங்கம் – வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிந்தாமணி குணசிங்கம் அவர்களின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, திருமதி தெய்வயானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், சுப்பிரமணியம், திருமதி சின்னத்தம்பி கார்த்திகேசு, குமாரசாமி, ஐயாத் துரை ஆகியோரின் மைத்துனியும், சத்தியவரதன் (கட்டைப்பிராய்) நிர்மலா (நல்லூர்) கிருபாவரதன் (நெடுந்தீவு) கோகுலவரதன் (லண்டன்) சந்திரகலா (நல்லூர்) விஜயலதா (லண்டன்) பத்மவரதன் (கனடா) தவமேகலா (லண்டன்) பானுகலா (பிரான்ஸ்) அருள் வரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மஞ்சுளா (கட்டைப்பிராய்) சிறிகரன் (நல்லூர்) பாக்கிய லட்சுமி (நெடுந்தீவு) சகுந்தலாதேவி (லண்டன்) புவனேந்திரா (நல்லூர்) தர்மரட்ணம் (லண்டன்) பொன்மதி (கனடா) செல்வராசா (லண்டன்) சபேசன் (பிரான்ஸ்) ஜானகி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், குமரன், குகப்பிரியன், ஜனகன், துவாரகன், மகீபன், நிரூஜன், கினோஜா, மதுசன், நிரோசன், கிந்துஜன், அபியதர்சன், விட்டலன், லக்ஷினி, ஜானுசா, தனுசா, அனுராஜ், அபிராஜ், பாணுசன், டினோசா, கவிசன், ஆருத் ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி யளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**077 982 5051**

தகவல்:
**குடும்பத்தினர்**

## பேச்சு...

தில் முன்னேற முடியவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் முன்னணி ஆங்கில சஞ்சிகையான "ப்ரொண்ட்லைன்" (குசுழுவேடுஐநே)இற்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து தமிழர் தேசியப் பிரச்னைக்கான தீர்வு என்பது பெரும் பிரச்னையாக இருந்து வருகிறது. தமிழ் மக்கள் சுதந்திரத்தை ஆதரித்தனர். குடியுரிமை சட்டம் மற்றும் கிழக்கிலும் வடக்கிலும் பெருமளவிலான சிங்களக் குடியேற்றங்களுக்கு பிறகு அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இது அந்த பகுதிகளில் மக்கள்தொகை அமைப்பை மாற்றியது.

தமிழ் மக்கள் தமது பகுதிகளில் சுயாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வைக் கோரினர். இதுவே ஜ1957ஸ பண்டார நாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் மற்றும் ஜ1987ஸ இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படையாகும். இரண்டுமே தமிழ் மக்களின் அடையாளம், பிரதேசம் மற்றும் சுயநிர்ணய உரிமை அல்லது அவர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமை தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருந்தன. துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசாங்கம் ஒப்பந்தங்களை மீறியுள்ளது.

சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்த வரையில், அவர்கள் எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் தமிழர் விரோத நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதிலேயே முதன்மையான அக்கறை கொண்டுள்ளனர். இது தொடரும் வரை ஒன்றும் செய்ய முடியாது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையிலும், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையிலும் இலங்கை ஒரு கட்சியாக உள்ளது. இரண்டு உடன்படிக்கைகளும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்குகின்றன.

நாடு எந்த வகையிலும் பிளவுபடுவதை நாங்கள் விரும்பவில்லை நாங்கள் பிரிக்கப்படாத இலங்கைக்காக நிற்கிறோம். அதே சமயம் இப்படியே போக முடியாது. இந்த விடயத்தை நன்கு அறிந்த சர்வதேச சமூகத்தை அணுகுவதைத் தவிர எமக்கு மாற்று வழி இல்லை. வடக்கு, கிழக்கு தொடர்பாக சில சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். வடக்கிலும் கிழக்கிலும் ஒரு ஏற்பாட்டை முன்னெடுத்துச் செல்வது இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் கடமையாகும்.

இலங்கை அரசாங்கம் அரசியல் பிரச்னையை வழங்கவில்லை. ஒரு பக்கம் வடக்கு, கிழக்கில் மீள்குடியேற்றத்தின் மூலம் சிங்கள சனத்தொகை அதிகரித்து வருகின்றது. மறுபுறம் வன்முறைகள் மற்றும் ஸ்திரமற்ற அரசியல் நிலைமைகள் காரணமாக தமிழர்கள் வெளியேறி வருகின்றனர். இப்படியே போனால் மக்கள் தங்கள் அடையாளத்தையும் சுயமரியாதையையும் கண்ணியத்தையும்கூட காப்பாற்ற முடியாமல் போய்விடும். சர்வதேச சமூகம் இதற்கு இடமளிக்கக்கூடாது. இது உலகுக்கு ஒரு மோசமான முன்னுதாரணமாக அமையும். அவர்கள் இந்தப் பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் இந்த நாட்டில் அமைதியை விரும்பினால் இந்த பிரச்னை தீர்க்கப்பட வேண்டும். (ஐ)

## 44,000...

இவர்களில் ஒரு இலட்சத்து 71,497 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 91,115 பேர் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்தவர்களில் 43,927 பேர் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

உயிரியல் விஞ்ஞான பீடத்துக்கு 9,749 மாணவர்களும், பௌதிக விஞ்ஞான பீடத்துக்கு 8,020 மாணவர்களும், வணிக பீடத்துக்கு 7,701 மாணவர்களும், கலைப்பீடத்துக்கு 11,314 மாணவர்களும், பொறியியல் தொழிநுட்ப பீடத்துக்கு 2,236 மாணவர்களும், உயிர் அமைப்புக்கள் தொழிநுட்ப பீடத்திற்கு 1,543 மாணவர்களும், ஏனைய பீடங்களுக்கு 665 மாணவர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

மேலும் இம்முறை நான்கு புதிய பீடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் தலா 50 மாணவர்கள் என 200 மாணவர்களை உள்வாங்க எதிர்பார்க்கப்படுகிறது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பொருளாதாரம்...

உரையாற்றும் போதே தெரிவித்துள்ளார்.

"இது விவசாயத்தை நம்பியிருக்கும் நாடு என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், எடுக்கப்பட்ட தவறான கொள்கை முடிவுகளால் இந்தத் துறை தோல்வியடைந்துள்ளது" எனவும் அவர் தெரிவித்தார்.

"மத்திய வங்கியில் கலாநிதி பட்டம் பெற்ற பலர் உள்ளனர். பின்னர் அவர்களும் தோல்வியடைந்துள்ளனர். 225 பாராளுமன்ற உறுப்பினர்கள்மீது மாத்திரம் ஏன் குற்றம் சாட்டப்படுகிறது? பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்களை இயற்றுவதற்கும், அமைச்சர்கள் ஆளுகைக்கான கொள்கையை வகுப்பதற்கும் உள்ளனர். அதற்கான சிறந்த சூழலை யார் உருவாக்க வேண்டும்? உதாரணமாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, ஜப்பான் மற்றும் இஸ்ரேல் போன்ற வளர்ந்த நாடுகளை எடுத்துக் கொள்வோம். பொருளாதார வல்லுநர்களுக்கு நவீன தொழில்நுட்பம் மற்றும் அறிவியலின் உதவியுடன் கொள்கை வகுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. பொருளாதார வல்லுநர்களால் தனியாக இந்தப் பணியைச் செய்ய முடியாது", என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## மின்...

ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்ட அவர், அதற்கான அமைச்சரவைப் பத்திரம் இதுவரை மின்சார சபைக்கு கிடைக்கப்பெறவில்லை என்றும் அது அதிகாரபூர்வமாக கிடைக்க இன்னும் சில நாட்கள் ஆகும் எனவும் குறிப்பிட்டார்.

மின்சார கட்டண உயர்வுக்கு எதிர்ப்புகள் கிளம்பினாலும் அரசின் முடிவை நடைமுறைப்படுத்த மின்சார சபை கட்டுப்பட்டிருப்பதாகவும் மின்சார கட்டண உயர்வு திடீர் செயல் என்றும் அதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ-சி)

## சீனா...

பற்றி கலந்துரையாடி ஒரு சிறந்த தீர்வுக்கு வர எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜீவா தெரித்துள்ளார்.

வளர்ந்து வரும் சந்தையில் 25 வீதமான நாடுகளும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 60 வீதமான நாடுகளும் கடன் நெருக்கடியில் இருக்கின்றன. இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவ இதுபோன்ற ஒரு பொது பொறிமுறையை விரிவுபடுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தேர்தலை...

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு - செலவு திட்ட ஒதுக்கீட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு விரைவாக வந்து பதிலளித்து விட்டு, மீண்டும் விரைவாக சபையை விட்டுச் செல்கிறார். 2023 ஆம் ஆண்டு 20 ஆம் திகதிக்கு முன்னர் புதிய உள்ளூராட்சி மன்றம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

2023 ஆம் ஆண்டு 20 ஆம் திகதிக்கு முன்னர் புதிய உள்ளூராட்சி மன்றத்தை ஸ்தாபிக்க வேண்டுமாயின் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான வர்த்த மானியை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இந்த மாதத்துக்குள் வெளியிட வேண்டும். தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு அரசமைப்பால் இந்த அதிகாரம் உரித்துடையாக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சட்டமா அதிபரின் ஆலோசனை கோரியுள்ளதை அறிய முடிகிறது. தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அதிகாரம் உள்ளது,ஆகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை கோருவது பயனற்றது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் கோரலுக்கான வர்த்தமானி அறிவித்தலை எந்நேரமும் வெளியிட முடியும். தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஆணைக்குழு சூழ்ச்சிகரமாக செயல்படுவது தெளிவாக விளங்குகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதியை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. ஆனால், ஆணைக்குழு தொடர்ந்து காலம் தாழ்த்தி வருகின்றமை ஏதோவொரு சூழ்ச்சி இடம்பெறுவதை நன்கு அறிய முடிகிறது. ஆகவே, ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு விரைவாக வருகை தந்து எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிப்பதைப் போன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதையும் ஓடி வந்து குறிப்பிட வேண்டும்.

தேர்தல் தொடர்பில் அரசாங்கத்தின் சமிக்ஞையை எதிர்பார்த்த நிலையில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளது. ஆகவே, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா எவ்வாறு செயல்பட்டார், யாருக்காக செயல்பட்டார், எவரது அரசாங்கத்தில் எந்த பதவி வகித்தார் என்பதை நன்கு அறிவோம். அவர் சுயாதீன நபர் அல்ல. அரசியல் ரீதியில் தொடர்புபட்டவர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் சூழ்ச்சியில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பாக ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா உள்ளார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் சட்டமாதிபரின் ஆலோசனையை கோருவது அவசியமற்றது. அத்துடன், சட்டமா அதிபரின் ஆலோசனையை நாட்டு மக்களுக்கு குறிப்பிடப் போவதில்லை எனவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, தேசிய தேர்தல் ஆணைக்குழு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் - என்றார்.

## இரவு நேர...

அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று சுற்றுலா துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு கிழக்கிலும் சுற்றுலா துறைகள் இனங்காணப்பட்டு அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுப்போம் என்றும் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் வரவு - செலவு திட்டத்தில் சுற்றுலாத்துறைக்கான ஒதுக்கீடு தொடர்பாக உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சுற்றுலா பிரதேசங்களின் கடைத்தெருக்கள் 24மணி நேரமும் திறக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சுற்றுலா பயணிகளிடமிருந்து டொலர்களை தேடிக் கொள்ள முடியாமல் போகும்.

குறிப்பாக இரவு களியாட்ட விடுதிகள் 24மணி நேரம் திறக்கப்படவேண்டும். இரவு நேர பொருளாதாரம் மூலமே நாட்டின் பொருளாதத்தில் 70வீதம் தங்கி இருக்கின்றது. பகல்நேர பொருளாதாரம் 30 வீதமே இருக்கின்றது. ஏனெனில், மதிய நேரத்திலே மக்கள் பல வேறு தொழிகளில் ஈடுபடுகின்றனர்.

அதனால் இரவு பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இரவு 10மணிக்கு பின்னர் ஹோட்டல், மதுபான விடுதிகளை மூடிவிட்டு சுற்றுலாத்துறையை முன்னேற்றவும் முடியாது. நாட்டையும் முன்னேற்ற முடியாது. - என்றார். (ஐ)

## குளத்திலிருந்து...

இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## சிறீ லங்கன்...

கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

அடுத்த மூன்று மாதங்களில் இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், சிறீ லங்கன் விமான நிறுவனத்தின் மூலம் சிறப்பான சேவையை வழங்கவுள்ளதாக நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சிறீ லங்கா விமான நிலையத்திற்கு சொந்தமாக எந்தவொரு விமானமும் இல்லை என தெரிவித்த அமைச்சர், அனைத்து விமானங்களும் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டவை எனவும் அவ்வாறான 24 விமானங்கள் உள்ளன என்றும் கூறினார். (ஐ)

## இனப்...

யாற்றியபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்நிலையில், தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கான முதலாவது கூட்டம் வரும் 12ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

வரவு - செலவு திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது, கடந்த வாக்கெடுப்பின்போது பெறப்பட்ட 137 ஆதரவு வாக்குகளையும் தக்கவைப்பதற்கான முயற்சிகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்து வருகிறார் என்று கூறப்படுகின்றது. இதன் ஓர் அங்கமாக தீர்வுக்கான பேச்சையும் அவர் பயன்படுத்த முனைகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# போர்த்துக்கல்லை வீழ்த்திய தென்கொரியா அடுத்த சுற்றில்!




டோஹா, டிசெ. 03

வலுவான போர்த்துக்கல் அணியை வீழ்த்திய தென்கொரியா எச் குழுவிலிருந்து 16 அணிகள் சுற்றுக்கு முன்னேறியது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் கட்டாரில் நடக்கிறது. இதில் நேற்றிரவு நடந்த போட்டிகளில் ஒன்றில் தென்கொரியா - போர்த்துக்கல் அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கிய 5ஆவது நிமிடத்திலேயே கோல் அடித்தது போர்த்துக்கல். றிகார்டோ ஹோர்ரா அந்த அணிக்காக கோல் அடித்தார். இதனால், போர்த்துக்கல் ரசிகர்கள் பெரும் உற்சாகம் அடைந்தனர்.

ஆனால், இந்தக் கோலுக்கு 27ஆவது நிமிடத்திலேயே பதில் கோல் போட்டு அசத்தியது தென்கொரியா. கிம் யங் குவான் அந்தக் கோலை அடித்து சவாலை ஏற்படுத்தினார்.

முதல் பாதி ஆட்டம் முடிவடைந்த நிலையில் மேலதிகமாக எந்தக் கோலும் பெறப்படவில்லை. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் எந்தக் கோலும் பெறப்படவில்லை. எனினும், மேலதிக நேரத்தில் 90 1ஆவது நிமிடத்தில் தென்கொரியாவின் வாங்க் ஹீ - சான் கோல் அடிக்கவே, இறுதியில் தென்கொரியா 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் உருகுவே அணியுடன் சம புள்ளிகளைப் பெற்றிருந்தாலும் கோல்கள் அடிப்படையில் தென்கொரியா 16 அணிகள் சுற்றுக்கு நுழைந்தது.

இதேசமயம், நேற்றிரவு நடந்த மற்றொரு போட்டியில் உருகுவே அணி கானாவை எதிர்கொண்டது. உருகுவே அணிக்காக 26, 32ஆவது நிமிடங்களில் ஜியோர்கியான் டி அரெஸ்காட்ரா கோல்களை போட்டார். கானாவால் கடைசிவரை கோல் அடிக்க முடியவில்லை. இதனால், 2 - 0 என்ற கோல் கணக்கில் உருகுவே அணி வெற்றி பெற்றது. (ஐ)

# உலகக் கிண்ண உதைபந்து; வெளியேறியது ஜேர்மனி!

டோஹா, டிசெ. 03

கோஸ்டரிக்காவுக்கு எதிரான போட்டியில் ஜேர்மனி வெற்றி பெற்ற போதிலும் 16 அணிகள் சுற்றுக்கு தகுதி பெற முடியாமல் வெளியேறியது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் கட்டாரில் நடக்கிறது. இதில் நேற்று நள்ளிரவு நடந்த இரு போட்டிகளில் கோஸ்டாரிக்கா - ஜேர்மனி அணிகள் மோதின.

போட்டி ஆரம்பமான 10ஆவது நிமிடத்திலேயே ஜேர்மனிக்காக செர்ஜ் ஞாபிரே கோல் அடித்தார். முதல் பாதி ஆட்டம் முடியும்வரை வேறு கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் - 58ஆவது நிமிடத்தில் கோஸ்டாரிக்கா அணி பதில் கோல் போட்டது. யெல்ஸ்ரின் தேஜடா அஇந்தக் கோலை அடித்தார். 70ஆவது நிமிடத்தில் அந்த அணிக்காக இரண்டாவது கோல் அடித்தார் மனுவேல் நேஜூர். இதன் மூலம் கோஸ்டாரிக்கா முன்னிலை பெற்றது.

எனினும், இந்த முன்னிலை நீண்டநேரம் நீடிக்கவில்லை. கை ஹாவெட்ஸ் 73, 85ஆவது நிமிடங்களில் கோல்கள் அடித்து ஜேர்மனியை முன்னிலை பெற வைத்தார். தொடர்ந்து 89ஆவது நிமிடத்தில் நிகால் புல்குருக் அடித்தார்.

இறுதியில் 4 - 2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் ஜேர்மனி வெற்றி பெற்றபோதும், கோல் கணக்கில் ஸ்பெய்ன் அணி முன்னிலை பெற்றதால், 16 அணிகள் சுற்றுக்கு தகுதி பெற்றது. சமபுள்ளிகளை பெற்றிருந்தும் மூன்றாவது இடத்தைப் பிடித்ததால் பிரிவு இ இலிருந்து ஜேர்மனி வெளியேறியது. (ஐ)

# 'புதிய விடியல்' உதைபந்தாட்டம் அரையிறுதியில் சென். நீக்கிலஸ்



யாழ்ப்பாணம், டிசெ. 03

புதிய விடியல் உதைபந்தாட்டத்தில் முதல் அணியாக அரையிறுதிக்கு தகுதி பெற்றது நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி.

டான் தொலைக்காட்சி குழுமம் யாழ். உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரை நடத்துகிறது.

இதன் காலிறுதி போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. துரையப்பா பொது விளையாட்டரங்கில் நடந்த இந்தப் போட்டியில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் - அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் சென். நீக்கிலஸ் அணி 3 கோல்களை அடித்தது. சென். பிலிப்ஸ் அணியால் ஒரு கோலை மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால், இந்தப் போட்டியில் சென். நீக்கிலஸ் 3 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

**இன்றைய போட்டி**

இன்று சனிக்கிழமை 3. 45 மணிக்கு நடக்கவுள்ள இரண்டாவது காலிறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன், ஆனைக்கோட்டை யூனியன் அணிகள் மோதவுள்ளன.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணி அரையிறுதியில் சென். நீக்கிலஸ் அணியை சந்திக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ. பி. எல். தொடரிலிருந்து ஓய்வு பெற்றார் பிராவோ!




சென்னை, டிசெ. 03

ஐ. பி. எல். போட்டியிலிருந்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர் பிராவோ ஓய்வு பெற்றுள்ளார். இதையடுத்து அந்த அணியின் பந்துவீச்சுப் பயிற்றுநராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இருபது - 20 கிரிக்கெட்டில் 600 விக்கெட்கள் எடுத்த முதல் பந்துவீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றவர் 39 வயது மேற்கிந்தியத் தீவுகள் வீரர் பிராவோ. சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக 91 இருபது -20 போட்டிகளில் 78 விக்கெட்களும் ஐ. பி. எல். போட்டியில் 161 போட்டிகளில் 183 விக்கெட்களும் எடுத்துள்ளார்.

ஐ. பி. எல். போட்டியில் அதிக விக்கெட்கள் எடுத்த வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். 2008 முதல் 2017 தவிர அனைத்து வருட ஐ. பி. எல். போட்டிகளிலும் பிராவோ விளையாடியுள்ளார். 2011இல் சென்னை அணிக்கு தேர்வானார். இரு வருட தடையின்போது 2016, 2017இல் குஜராத் அணிக்காக விளையாடினார். பிறகு 2018இல் சென்னை அணிக்கு மீண்டும் திரும்பினார்.

டிசெம்பர் 23 அன்று கொச்சியில் ஐபிஎல் 2023 போட்டிக்கான வீரர்களின் ஏலம் நடைபெறவுள்ளது. கடந்த வருட அணியிலிருந்து தக்கவைக்கப்பட்ட வீரர்களின் பட்டியலை சமீபத்தில் அனைத்து அணிகளும் அறிவித்தன. சென்னை அணி பிராவோவை விடுவித்தது. கடந்த வருடம் அவரை ஏலத்தில் 4.40 கோடி இந்திய ரூபாய்க்கு தெரிவு செய்தது.

இந்நிலையில், ஐ. பி. எல். தொடரிலிருந்து பிராவோ ஓய்வு பெற்றுள்ளார். இதனால், சென்னை அணியின் பந்துவீச்சு பயிற்றுநர் என்ற புதிய பொறுப்பை பிராவோவுக்கு அளித்துள்ளது சென்னை நிர்வாகம்.

சென்னை அணிக்காக 144 போட்டிகளில் விளையாடியுள்ள பிராவோ, 168 விக்கெட்களும் 1,556 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

சென்னை அணி நான்கு முறை ஐ. பி. எல். கிண்ணங்களை வென்றதில் 2011, 2018, 2021 ஆகிய ஆண்டுகளில் பிராவோவின் பங்களிப்பும் இருந்தது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.